# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 34-ம் இலக்கம்


## மாதாவின் ஜனன மகோற்சவம்

உலகம் எண்டிசையிலும் பரந்திருக்கும் கத்தோலிக்க பக்த கோடிகளுக்கெல்லாம் புரட்டாசி மாதம் 8-ந்திகதி ஓர்அரிய பொன்னாளாகும். ஏனெனில், அது எம்முடைய இரட்சகராம் திவ்வியயேசுவைக் கன்னிமை குன்றாது ஈன்றெடுத்த கன்னித்தாயின் ஜனனமகோற்சவதினம். பரமதிரீத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகியசர்வேசுரன் எம்மைஈடேற்றி மோட்சகரை சேர்க்கும்படியாக மானுடஅவதாரம் செய்ததினிமித்தம் அவர் எமதுமூத்தசகோதரராய் இருக்கும்போது, அவரைக்கன்னிசுத்தங்கெடாது பெற்றெடுத்த தூய கன்னிமரியாய் எமக்கும் தாயாகின்றாள் அன்றோ! அதனால் தாயின்பிறந்ததிருநாளைப் பெருநாளாகக் கொண்டாடுவது பிள்ளைகளுக்குரிய கடமையாகும்.

அங்ஙனமாக, எமது பரிசுத்த மாதாவாகியதிருச்சபை எமக்கு அளித்திருக்கும் புனிதவாளர்களின் நாமாவளியை ஆராய்வாக்கவனித்தால், அவர்கள்உயிர் நீத்து, இந்தஅநித்திய உலகை விட்டு நித்தியமுத்தியின் கரை போய்ச்சேர்ந்த நாளையே அவர்களின் திருநாளாக அது கொண்டாடுகின்றது. அதற்குக் காரணம் வெளிப்படையானதே. ஒருவர் எக்குடிப்பிறப்பேயாயினும், எந்த வமிசவழியேயாயினும், யாவரேயாயினும் அப்பிறப்பின் தன்மையினால், வமிசவழியினால் தெய்வ நியதியில் அவர் உயர்வையோ, தாழ்வையோ அடைவதில்லை. ஆனால், அவர் மோட்சபேரின்பம் எய்துவதும், அர்ச்சியசிட்ட பட்டம் பெறுவதும் அவரின் புனித சீவியத்தினாலும், புண்ணிய நடத்தையினாலும், கண்ணியஒழுக்கத்தினாலுமே. ஆகவே, ஒருவர்மண்,பொன், பெண் எனும் மூவாசைகளுடனும்போர் பொருதித் தீயன ஒழித்து, நல்லன இழைத்து உயிர் துறப்பரேல் அவர் பட்ட கஷ்ட நஷ்டத்திற்கும், துன்பதுரிதத்திற்கும் பரிசில் பெறும்நாள் அன்றே யானதால் அதனையேஅன்னாரது திருநாளாகக் கொண்டாடுவது சர்வ நியாயமாகும்.



ஆயினும் தகுந்த காரணத்துடனேயே எதையும் செய்கின்ற திருச்சபை மூவரின் பிறந்த பெருநாளைத் தனது ஞானமக்கள் கொண்டாட வேண்டுமென்று ஆஞ்ஞாபித்திருக்கின்றது. அவை யாவன: கர்த்தர் பிறந்தநாள், கன்னிமரியாய் பிறந்தநாள், இரட்சாபெருமானின் முன்னோடியாகிய அர்ச். ஸ்நாபக அருளப்பர் பிறந்தநாள். முதல்வரின்பிறப்புப் பற்றியசம்பவம் யாவரும்அறிந்ததே. அவர்பிறந்திராவிடில் எமக்கேது இரட்சணியம்? ஆதலின் அன்றுநாம் ஆனந்தங் கொண்டாடுவது பொருத்தமுடையதே. இரண்டாவதாக, விடிவெள்ளி துவங்கவே மக்கள் துயிலொழிந்து, இதோசூரியன் உதயமாகப்போகிறானென்று சுறுசுறுப்பாகத் தத்தம் தொழில் துறைகளைத் தொடங்குவதற்குச் சந்தோஷித்தெழுவதுபோல், விடியற்கால விண்ணொளியாம் கன்னிமரியாய் சென்மிக்கவே, இதோநித்தியசூரியன் உதயமாகும்நாள் அண்மியதெனத் தீர்க்கதரிசிகள் ஆனந்தங் கொண்டாடினார்கள். அவர்களுடன் நாமும் ஏகோபித்து அந்தச்சுபநாளைக் கொண்டாடுவது நியாயமானதே. மூன்றாவதாக, அர்ச். ஸ்நாபக அருளப்பர் ஆறுமாதகர்ப்பமாய்த் தம்முடையதாயின் உதரத்தில் அடைபட்டிருக்கும்போது, மாமிசமான வார்த்தையானவரைத் தேவஉதவியால் முப்பொழுதும் கன்னிமை கெடாது சூலாகக்கொண்ட திருத்தாயின்தரிசனத்தால் துள்ளிக் குதிக்க, . தூய ஆவியானவர் அவரைநிரப்ப, அவர்சென்மபாவ தோஷம் நீங்கப்பெற்றுப் பிறந்தார். அதனால்நாம் அவர்பிறந்த பெருநாளைக் கொண்டாடுவதற்குப் பிறகாரணமும் வேண்டுமா?

உந்நதத்தினின்று தோன்றிய ஞானசூரியனாகிய யேசுக்கிறீஸ்துவின் வருகையைமுன்னறிவித்த "விடியற்காலத்தின் நட்சத்திரம்" திருக்கன்னிமரியாயே. விடிவெள்ளிதோன்றியபின்னரே அருணன் உதயமாகின்றான். கன்னிமரியாகிய காலைவெள்ளியை முன்னர் தோற்றுவித்துப் பாருலகின் பாவாந்தகாரத்தைப் போக்கப் பரமஞானபானுவாகிய யேசுபகவான் வெளிப்பட்டார். இம்மாதரசியின் மகத்துவம் வாக்கினுக்கு அடங்காது, மனதினுக்கும் எட்டாது. ஏனெனில், உலக இரட்சணியத்தின்பொருட்டு எம்பெருமான் கல்வாரிமலையில்சிந்திய திருஉதிரம் இந்தக்கன்னித்தாயின் உதிரமென்றால் அவள்பெருமையை எடுத்துக்கூறவும் வேண்டுமா? இரட்சணியத்தின் அரியவேலைக்குத் திருச்சுதனைத் தக்கவாறு பக்குவப்படுத்தியவள் இக்கன்னிகையே. உலகமுண்டானகாலமுதல் தோன்றியிருந்த லட்சாதிலட்சம் மாதர்களில் இதற்கென்று தெரிந்துகொள்ளப்பட்டவளும், ஆசீர்வதிக்கப்பட்டவளும் இவளே. அதிதூதரான கபிரியேல் தேவசந்நிதானத்தினின்று நேரே இவளிடம் தூதாக அனுப்பப்பட்டு வந்தார். விண்ணின்றுவந்த தூதன்என்ற முறையில் "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க; கர்த்தர்உம்முடனே; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்று மங்களகரமாய் வாழ்த்துகின்றார். ஆகவே, ஏனைய

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## லூர்துபதிப் புதுமைகளும் லூத்தேர்சபை மேற்றிராணியாரும்

ஜேர்மனியிலே அதிகம்கீர்த்தி வாய்ந்த புரொட்டஸ்தாந்த தலைவர்களில்ஒருவர் லூர்துபதிப் புதுமைகள்பற்றிப் பெரிதும்ஆச்சரியப் படத்தக்கவிதமாய் அனுதாபமுடையகருத்துஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றார். தம்மாலேயே பிரசுரஞ்செய்யப்படும் "குவாரெம்பர்"என்ற சஞ்சிகைக்கு ஒல்டென்பேர்க்கின் முன்னாள் லூத்தேர்சபை மேற்றிராணியாரான டக்றர்வில்ஹெல்ம் ஸ்ரேலின் அவர்கள் எழுதியுள்ள ஓர் கட்டுரையிலே, இரு வருடங்களின்முன்னர் தாம் லூர்துபதியைத் தரிசித்ததுபற்றித் தம்மனதிற்பட்டதைப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார். "புரொட்டஸ்தாந்தராகியநாம் லூர்துபதிக் காட்சிகள்மட்டிலே அதிகம்இலேசான ஒருதீர்ப்புச்சொல்ல மனச்சார்புகொள்ளுகிறோம். அங்கு விக்கிரகஆராதனையாகிய தீமை நிலவப்போகிறதென்று முன்பின் யோசியாது மொட்டையாகச் சொல்லிவிடுவதானது பிறர்சிநேகக்குறைவும், அநீதியும், பேதமையுமாகும். எனது அபிப்பிராயப்படி, இயற்கையைக்கடந்த உலகின் நம்பத்தகுந்த நிச்சயமானகாட்சிகள் அங்குநடந்தன என்றும், அத்தகையகாட்சிகள் இன்னுமே நடக்கின்றனஎன்றும் நாம்ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; அர்ச். பாவிலுவானவர் தமாஸ்குஸ் நகருக்குச் செல்லும்வழியிலே பட்டனுபவித்ததை — பெற்ற தரிசனத்தை நாம் பயபக்தியுடன் கருத்தாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவருடையதுபோன்ற அனுப

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# அங்கும் இங்கும்

### அரசியல்வாதிகளின் முன்மாதிரி

"அரசியல்வாதிகள் வகுப்புவாதம், சமயப்பொருமை, சாதிவேற்றுமை போன்றவைகளைத் தூண்டிவிடும் கோஷங்களைக் கைவிட்டுத் தங்கள்பிள்ளைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தி டக்றர்மார், வழக்கறிஞர்களுக்குப் பதிலாக விவசாயிகளுக்கே தங்கள் பெண்மக்களைக் கலியாணஞ்செய்துகொடுத்து முன்மாதிரிகாட்டவேண்டும். இப்படிச் செய்வதன்மூலம்தான் விவசாயிகளின் கௌரவத்தை உயர்த்தலாம்."

**திரு. ஏ. திருஞானசம்பந்தன்,**
வவுனியா.

### வழிகாட்டவேண்டும்

"மதுபானத்தையும், சூதாட்டத்தையும் தடைசெய்து சட்டம்இயற்றுவதால் எவ்விதநன்மையும் ஏற்படப் போவதில்லை. குடிப்பதும், சூதாடுவதும் தவறுஎன்பதை மக்களுக்கு உணர்த்தி நல்வழியைக்காட்டுவதே பயனளிக்கும். மக்கள் மதுவருந்தக் கூடாதென்றும், சூதாடக்கூடாதென்றும் உண்மையிலேவிரும்பினுல் மந்திரிகளும், எம். பி. களும், மற்றும் பிரபலஸ்தர்களும் மதுவருந்தாமலும் சூதாடாமலும் மக்களுக்கு வழிகாட்டவேண்டும்."

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
தலதாபன மந்திரி.

### எவருக்கு நல்லஎதிர்காலம்

"எமதுநாட்டிலே பாடசாலைகளில் படிக்கும் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு எதிர்காலத்திலே அரசாங்க பகுதிகளிலோ அல்லது தனிப்பட்ட தொழில்ஸ்தாபனங்களிலோ உத்தியோகவசதிகள் கிடைக்குமென்று நம்பவியலாது. ஆனுல், உழுதுண்டுவாழும் விவசாயிகளுக்கோ நல்ல எதிர்காலம் உண்டு."

**ஜனுப் எச். எஸ். இஸ்மாயில்,**
பாராளுமன்ற சபாநாயகர்.

### காலம் மலையேறிவிட்டது

"தமிழர் வருங்காலத்தில் படித்துப் பட்டம்பெற்று உத்தியோகம் வகிக்கலாம்என்றகாலம் மலையேறிவிட்டது. இன்றையநிலையில் தமிழர் சுதந்திரமாகவும், தன்மானத்துடனும் வாழவேண்டுமானுல் கமத்தொழில், குடிசைக்கைத் தொழில்ஆதியவைகளில் அதிககவனம் செலுத்தவேண்டும்."

**திரு. எஸ். சி. இராசரத்தினம்,**
மாங்குளம்.

### இளைஞர்களின் எதிர்காலம்

"வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இந்நாட்களிலே படித்த இளைஞர்கள் உத்தியோகம்கிடைக்குமெனப் பித்துப்பிடித்தவர்போல அலைந்துதிரியாமல் விவசாயத்துறையில் ஈடுபட்டு இந்நாட்டின் சுபீட்சத்திற்காக உழைத்தல்வேண்டும். விவசாயம் ஒன்றே இளைஞர்களின் எதிர்காலத்தை ஒளிபடைத்ததாக்க வல்லது."

**திரு. வி. வேலுப்பிள்ளை,**
உணவுஉற்பத்தி மேற்பார்வையாளர்.

### இலங்கையும் நெல்லுற்பத்திநாடுகளும்

"இலங்கை நெல்உற்பத்திசெய்வதற்குத் தகுந்தநாடாகும். ஆனுல், உலகின்ஏனைய நெல்உற்பத்திநாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது இலங்கை இத்துறையில் எவ்வளவோ பின்தங்கியிருப்பதைக்காண வருத்தமாய் இருக்கிறது. உணவுஉற்பத்தியைப் பெருக்குவதற்கு நவீனவிவசாயமுறைகளைப் பயன்படுத்த நாங்கள் பின்வாங்கப்படாது. எங்கள்தேவையில் பாதி உணவுப்பொருட்களை இந்நாட்டில் உற்பத்திசெய்கிறோம். மீதித்தேவையைப் பூர்த்திசெய்யப் புதியநெல்வயல்களைத் திறக்கவேண்டியது அவசியம்."

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
தலதாபன மந்திரி.

### சேவையை உணர்த்தும் கல்வி

"எமது வருங்காலச்சிறுர்கள் வருங்காலத்தில் சிறந்தசேவைஉணர்ச்சி உள்ளவர்களாகத் திகழவேண்டுமேயாகில் அவர்களுக்குச் சிறந்தசேவையை உணர்த்தும் கல்வியைப் புகட்டவேண்டும். அவ்விதகல்வியை எமதுபிள்ளைகள் இடையிட்டுப்பெறுவதிலும்பார்க்க ஆரம்பகல்வியிலிருந்து பெறுவதே சாலச்சிறந்தது. இவ்வித ஆரம்பகல்வியின் உறைவிடம் கிராமப்பாடசாலைகளே."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

### கம்யூனிஸத்தைத் தடுக்கவழி

"கம்யூனிஸம் நாட்டில்தோன்ருவண்ணம் தடுக்கவேண்டுமென்ருல், ஏழைமக்களின் வாழ்வுசெழிப்படைய நாம் பாடுபடவேண்டும். மக்களின்வாழ்வு மலர்ந்தால் கம்யூனிஸத்துக்கு இடமேயிராது."

**சேர் சிறில் டி சொய்சா,**
செனற்சபைத் தலைவர்.

### இருமுக்கிய பிரச்சினைகள்

"வாழ்க்கைச்செலவைக் குறைப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதுமே இன்றைய அரசாங்கத்தின் இருபெரும் பிரச்சினையாகும்"

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
தலதாபன மந்திரி.

### உணவுப்பிரச்சினைக்குப் பரிகாரம்

"இந்நாட்டில்வருடந்தோறும் அதிவேகமாக அதிகரித்துவரும் சனத்தொகைகாரணமாக உணவுப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டிய ஒரு பெரும்பிரச்சினை இந்நாட்டினை எதிர்நோக்கியுள்ளது. உள்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதன்மூலமே இப்பிரச்சினைக்குப் பரிகாரம்காணமுடியும்."

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
தலதாபன மந்திரி.

### விவசாய திருமணத்தம்பதிகள்

"கிளிநொச்சியிலே படித்தவர்களது குடியேற்றதிட்டத்தின் மகிழ்ச்சிக்குரிய அம்சங்களிலஒன்று யாதெனில், யுவதிகளும் விவசாயத்தில்உற்சாகமாக ஈடுபட்டு முன்னர்தாங்கள் ஒருபோதும் கண்டிராதவர்களும், தங்களைப்போல விவசாயிகளாகக் குடியேறியவர்களுமான இளைஞர்களையே திருமணஞ்செய்துகொண்டதன்மூலம் இப்போது யாழ்ப்பாணத்தில் துரதிர்ஷ்டவசமாகக் குடிகொண்டுள்ள துவேஷம,பொருமை முதலியவை அடியோடுஇடம்பெருத நல்வாழ்க்கை நடத்துவதேயாகும்."

**திரு. எஸ். சுப்பிரமணியம்,**
பூநகரி, விவசாயப்பரிசோதகர்

### அரசாங்கத்தை விழுத்தவேண்டும்

"பிரதமர் பண்டாரநாயகா தனது நடவடிக்கைகளாலும், பேச்சுகளாலும் நாட்டுக்கும், முன்னேர்களுக்கும் வசைதேடி வைத்துவிட்டார். அவர் பதவிக்குவந்ததும் உலகப்புகழ்பெற்ற துட்டகைமுனுவுக்கு அவமானத்தைச் செய்யும்வகையில் பேச்சுகள் பேசினுர். துட்டகைமுனுவாள்கொண்டு ஆட்சிபுரிந்ததைப்போன்று பேனுகொண்டு தான்ஆட்சிபுரியப் போவதாகச்சொன்னுர். இன்று அவருடைய பேச்சினுல் நாட்டுக்குமட்டுமல்ல, எம் முன்னேர்களுக்கும் அவமானத்தைத் தேடிவைத்துவிட்டார். போற்றி மரியாதைசெய்யவேண்டிய முன்னேர்களை அவமரியாதை செய்வதன்பலன் தான் இன்றுநாட்டில் வெள்ளம்வரட்சி போன்ற கஷ்டங்கள்ஏற்பட்டது. புத்தசமயம் வெறும்மேடைப்பேச்சாக இருக்கிறது. புத்தர்களும், புத்தபிக்குகளும் புத்ததர்மத்தின்படி நடக்கவேண்டும். இந்த அரசாங்கத்தை விழுத்தவேண்டும்."

**நாவல்பிட்ட சந்தானந்த தேரோ.**



# பல தேசங்களில்

### கம்யூனிஸமும் முஸ்லீம்லீக்கும்

"கடவுளிலே நம்பிக்கையற்ற நிரீச்சுரவாதிகளான கம்யூனிஸ்தர்களுடன் முஸ்லீம்லீக் ஒருபோதுமே ஒத்துழைக்கமாட்டாது" என்று இந்திய யூனியன் முஸ்லீம்லீக் தலைவர் ஜனுப் முகம்மத் இஸ்மாயில் சாஹிப்அவர்களும், அதன் கேரளக்கிளையின் பொதுக் காரியதரிசி ஜனுப் கே. எம். சித்தீக் சாஹிப்அவர்களும் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிருர்கள். அந்தஅறிக்கை மேலும்கூறுவதாவது: "முஸ்லீம்லீக்கிற்கும, கம்யூனிஸ்தகட்சிக்கும் கேரளத்தில்மட்டுமின்றி இந்தியாவின் எப்பகுதியிலுமே எவ்விதமான கூட்டுறவோ அல்லது ஒத்துழைப்போ இருப்பதென்பது முடியாதகாரியம். உண்மையிலே முஸ்லீம்லீக்கட்சி ஒன்றுதான் ஆரம்பத்திலிருந்து இதுவரையிலும் கம்யூனிஸ்தகட்சியை ஒருமுகமாக எதிர்த்துவந்திருக்கிறது. சென்றதேர்தலின்போது முஸ்லீம்லீக் கம்யூனிஸ்தர்களுடன் சேர்ந்துழைத்ததாகப் பிரதமர்நேரு கூறியிருப்பது தவறு. கடவுள்நம்பிக்கை அற்றதும், பொருமையிலும், பலவந்தத்திலும் நம்பிக்கை கொண்டிருப்பதும், தார்மீகக் கொள்கைகள், தனிமனிதனின் சுதந்திரம், குடும்பஉறவுகள் ஆதியவற்றை உதாசீனம்செய்துவருவதும், மனிதர்களை மனிதாபிமானமற்ற முறையில் கட்டுப்பாட்டுக்குள்ளாக்க முயன்றுவருவதுமான ஒருகட்சியுடன் முஸ்லீம்லீக் எவ்வாறு தொடர்புகொள்ள முடியும்? இந்தக் கடைசிநிமிஷத்திலாவது உண்மையைஉணர்ந்து கேரளமக்களைப் பாதுகாக்க அரசாங்கம்முன்வந்தது போற்றத்தக்கது."

### மனிதனுடன்கூடிய செயற்கைக்கிரகம்

சோவியற்ருஷியபிரதமர் நிகிதா குருஷேவ் அமெரிக்கஜனுதிபதியுடன் சம்பாஷணை நடத்துமாறு அடுத்தபுரட்டாசிமாதம் ஐக்கியஅமெரிக்கதேசம் சென்று அங்கேதங்கியிருக்கும்போது, ருஷியபூமியைச்சுற்றிவர ஓர்மனிதனைக்கொண்ட செயற்கைக்கிரகம்— அதாவது செய்மதிஒன்றை வானவீதிக்கு அனுப்பிவைக்கருஷியாமுயலுமென அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த வானவெளி வைத்தியநிபுணர் டக்றர்ஹியூ றக்கோல்ய் சென்ற 22-ந் திகதி தெரிவித்திருக்கின்ருர். ஜேர்மனியில் பிறந்தவரும், விமானப் பயிற்சிக்கழக அதிபருமான இவர் அன்று அமெரிக்க விமானத்தளம்ஒன்றில் பேசியபோது: திரு. குருஷேவ் வாஷிங்ரனில் தங்கியிருக்கும்போது, சோவியற் விஞ்ஞானிகள் தங்கள்சாதனைகளைப் பிரசாரஞ்செய்வதற்காக ஒருமனிதனைக் கொண்ட செயற்கைக்கிரகம் ஒன்றை வானவீதிக்கு அனுப்பக்கூடுமென்று அவர்குறிப்பிடலாயினர்.

* * *

● ஜப்பானிய அட்மிரல் ராகியோகா அவர்களின் புதல்வியான மேரி தெரேசா சமீபத்தில் ரோக்கியோநகரிலுள்ள மேர்சடாறியன் கன்னிகாமடத்திலே கன்னியாஸ்திரியாகி வாக்குத்தத்தம் அளித்திருக்கின்ருள். அப்போது அவளுடைய தாய்தந்தையரும் அங்கு சமுகமாயிருந்தார்கள்.

● பல்கேரியநாட்டின் பிரிவினைச் சபையானது பாவசங்கீர்த்தனம் கேட்பதைத் திரும்பவும் அனுசாணைக்குக் கொண்டுவந்திருப்பதாக அதென்ஸ்நகரிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல்கேரிய பிரிவினைச்சபைக்குரிய சாதனமாகிய "ரிசார்கோவென் வெஸ்ற்னிக்" என்ற சஞ்சிகையே இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

### 'பஞ்சசீலம்' பஞ்சாய்ப்பறக்கிறது

சோவியற்தலைவர்களாகிய குருஷோவும், புல்கானினும இந்தியாவுக்குவந்தபோதும், கம்யூனிஸ்தசீனுவின் பிரதமர் சூ-என்-லாய் வந்தபோதும் இந்திய அரசாங்கம் கொடுத்தவரவேற்பைப் போல அவ்வளவுசிறப்பான வரவேற்பு வேறெவருக்கும் கொடுக்கப்பட்டதில்லை. மொகலாய சக்கிரவர்த்திகள் காலத்தில்கூட அத்தகைய ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள் நடந்ததில்லை. இத்துடன் சூ-என்-லாயும், நேருவும் சேர்ந்து 'பஞ்சசீலம்' 'ஐந்து இலட்சியங்கள்' என்றஉந்நத தத்துவங்களைப் பிரகடனப்படுத்தினர். முதலாவது பிராஞ்சிய புரட்சியின்போது புரட்சிவீரர்கள்தொகுத்த 'மனிதப்பிறவியின் உரிமைகள்' என்ற சாசனத்திற்தும், முதலாவது உலகயுத்தத்திற்குப்பிறகு அப்பொழுது அமெரிக்க ஜனுதிபதியாயிருந்த வூட்ரோ வில்ஸன்விடுத்த "பதினுன்கு சீலங்கள்" என்ற பிரகடனத்திற்கும்பிறகு உலகசரித்திரத்தில் முக்கியத்துவம்பெற்றுவிட்டது "பஞ்சசீலம்" ஆனுல், அந்தோ! இந்தப் பஞ்சசீலம். இப்பொழுது பஞ்சாய்ப்பறக்கிறது. கடந்த மூன்றுவருடங்களாகச் சீனுவில் பதிக்கப்பட்டுவரும் தேசப்படங்களில் இந்தியாவின்ஒருபகுதி சீனுவின் ஒருபகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி இந்திய அரசாங்கம் மூன்றுதடவை முறையிட்டுக்கொண்டது. பலன்ஒன்றுமில்லை. மேலும், திபேத்திலிருக்கும் இந்தியர்களுக்குச் சீனஅதிகாரிகள் நெருக்கடி உண்டு பண்ணிவருகின்றனர். ஆவணி 13-ந் திகதியன்று பண்டிதநேரு பாராளுமன்றத்தில் சிலஅங்கத்தினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் "கடந்த இரண்டு அலது மூன்றுமாதங்களாகத் திபேத்திலுள்ள இந்தியர்களுடைய துன்பங்கள் மிகவும்அதிகரித்துள்ளன; திபேத்திலுள்ள சீனஅதிகாரிகளிடமும், பீக்கிங்கிலுள்ள சீனஅதிகாரிகளிடமும் இந்தியஅரசாங்கம் இதுபற்றி அடிக்கடி கூறிவந்திருக்கிறது; மூன்றுவாரங்களுக்குமுன் திபேத்திலுள்ள இந்தியர்கள் படும்தொல்லைகள் குறித்து விளக்கமாக ஒருமனுவைச் சீனஅரசாங்கத்திக்கு அனுப்பினேம். ஆனுல், அதற்கு இதுவரை எந்தவிதமான பதிலுமில்லை" என்று கூறினுர்.

(ச. வி.)

* * *

● சீனதேசபீக்கிங்நகர் அதிமேற்றிராணியாரும், தற்போது ஓர்தேசாந்திரியாய் இருந்துவருகிறவருமான கருதினுல் ரியென்ஆண்டவர் ஐக்கியஅமெரிக்கதேசத்தில் நிரந்தரமாகவசிப்பதற்காகச் சென்றமாதம்ஜேர்மனியிலிருந்து அங்குசென்றிருக்கின்ருர். சென்றவருடம் அருளப்பபாப்பரசரது தெரிவின்போது இவரும் ரூமாபுரியில் சமுகமாயிருந்தார். ஐ. அ. தேசத்திலே இவர் சிக்காகோநகருக்குச்சமீபமாய் ரெக்னி எனுமிடத்திலுள்ள அர்ச். மரியாயின் மிஷன்ஹவுஸில் சஞ்சரித்துவருவார்.

● பிராஞ்ஸ்தேச லில்நகருக்குச் சமீபமான ஆன்ஸ்ரெயிங்எனுமிடத்திலே தந்தையும், மைந்தனுமான வண. எட்மண்ட் கிளிற்றன்சுவாமியாரும், வண. எட்வாட் கிளிற்றன்சுவாமியாரும் சமீபத்திலே தங்கள்குருத்துவ வெள்ளி யூபிலிவிழாவை ஒருங்கேகொண்டாடினுர்கள். இவர்களிலே வண. எட்மண்ட் கிளிற்றன்சுவாமியார் ஆன்ஸ்ரெயிங் எனுமிடத்தின் பங்குக்குருவராய் இருந்துவருகின்ருர். வண. எட்வாட் கிளிற்றன்சுவாமியார் ஓர்தொமினிக்கன்சபைக்குருவாய் இருக்கின்ருர்.

# குருப்பட்டம்பெற்ற 55-ம் ஆண்டு

தாம் குருப்பட்டம்பெற்ற 55-ம் ஆண்டு நிறைவு ஞாபக தினம் அன்று வந்தபோது அருளப்ப பாப்பரசர் காஸ்தெல் காந்தல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையிலிருந்து கார் மூலம் புறப்பட்டுச்சென்று அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தையும், 12-ம் பத்திநாத பாப்பானவரினதும், அர்ச். 10-ம் பத்திநாதரினதும் கல்லறைகளையும் தரிசித்த பிற்பாடு, 1904-ம் ஆண்டு ஆவணிமாதம் 10-ந்திகதியன்று தாம் குருத்துவாபிஷேகஞ்செய்யப்பெற்ற கோவிலுக்கு — மொந்தெசானேவிலுள்ள 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சந்தாமரியாவின் சிறிய கோவிலுக்குச் சென்றார்.

அங்கே பெரிய பலிபீடத்தின் முன்பாகச் செபஞ்செய்தபின் அவர் தம்மை நல்வரவேற்ற அக்கோவில் கனன் குருவானவருடன் சிலவார்த்தைகள் பேசினார். தாம் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்ற கோவிலிலே திரும்பவும்நிற்பதானது தமக்கு ஆழ்ந்த உணர்ச்சிவேகம் உண்டுபண்ணும் ஓர் தரிசனையெனப் பகர்ந்து, அந்தச் சுபதினத்தை மற்றும் ஓர்தரம் கொண்டாடும்படியாய்ச் சீவித்திருக்கத் தமக்கு அனுக்கிரகஞ்செய்தருளிய தேவனின் நன்மைத்தனத்துக்காக அவருக்கு நன்றித்துதிகூறினார்.

ஆர்ப்பரித்துத் தம்மை வாழ்த்துவதற்காக ஓர்பெருஞ் சனக்கூட்டம் குழுமியிருந்த அக்கோவிலைவிட்டுப் பரிசுத்தபிதா அர்ச். லோறன்ஸியாரின் மகா தேவாலயஞ் சென்றார். அன்றே இவ்வர்ச்சியசிட்டரின் திருநாளுமாகும். திரும்பவும் அங்கே வந்துகூடிய பெருந்திரளான மக்களை நோக்கிப் பேசியவிடத்து, 55 வருடங்களின்முன்னர் தாம் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றதும் செபஞ்செய்வதற்காக அதேகோவிலுக்குத் தாம் வந்ததை ஞாபகத்திற்குக் கொணர்ந்தார். தமது பிரயாணத்தின்போது பாப்பரசர் தமது மாளிகையின் அந்தரங்க எசமானரான மொன்சிஞ்ஞோர் ரெக்கா சுவாமிகளோடும், தமது சொந்தக் காரியதரிசியான மொன்சிஞ்ஞோர் தோமஸ் றையன் சுவாமிகளோடும் சென்றிருந்தார்.

## பிரமாண்டமான அறையுண்ட சுரூபம்

ஐக்கியஅமெரிக்கதேச மிச்சிக்கன நகரிலே இந்திய நதிக்குச் சமீபமாகவுள்ள மலைத் திருசேத்திரம் ஒன்றிலே வெண்கலத்தாலும், மரத்தாலும் செய்யப்பட்டதும், 18 தொன் நிறைகொண்டதும், 75 அடிஉயரமுமான பாரிய அறையுண்ட திருச்சிலுவை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள அறையுண்ட சுரூபம் 31 அடி உயரமுள்ளது. 51 வயதுடையவரான மாஷல் பிறடெறிக்ஸ்என்ற பிரபலசிற்பி நான்குவருடகாலம் தொடர்ந்து வேலைசெய்து இந்தஅறையுண்ட திருச்சிலுவையைப் பூர்த்திசெய்யலாயினர்.

# வெகுமதிப் பொருட்களின் காட்சி

வத்திக்கான் பொக்ஷசாலைக்கு அருளப்ப பாப்பரசர் உபகரித்த வெகுமதிகளின் காட்சி ஒன்று அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலே பெருந்தொகையான மக்களை ஈர்ந்தவண்ணம் இருக்கின்றது. வத்திக்கான் பொக்ஷசாலைக்கு நவமாகச் சேர்ந்துள்ளவைகளில், சமீபத்திலே தமது பேட்டியின்போது பிரான்ஸிய ஜனாதிபதி தெகோல் அவர்கள் பாப்பரசருக்கு அன்பளிப்புச்செய்த ஓர் தங்கக் கதிர்ப்பாத்திரமும், அவருக்குமுந்திய பிரான்ஸிய ஜனாதிபதி றெனே கோத்தி அவர்களால் 12-ம் பத்திநாத பாப்பானவருக்கு அன்பளிப்புச் செய்யப்பெற்ற ஓர் தங்கப் பூசைப்பாத்திரமும், 12-ம் பத்திநாதருக்கு மெக்சிக்கோ நாட்டுக் கத்தோலிக்கமக்கள் அனுப்பிவைத்த பளீரிட்டொளிரும் வைரமணிகள் நெருக்கமாகப் பதிக்கப்பெற்ற ஓர் பூசைப்பாத்திரமும், அர்ச். 10-ம் பத்திநாதர் தமது இராச்சியமந்திரியாய் அப்போது விளங்கியிருந்த கருதினல் மெறிடெல்வால் ஆண்டவருக்குச் சன்மானித்த தங்கப் பேனையும், பென்சிலும் அடங்கியிருக்கின்றன. அப்போது ஸ்பானிய இராசகுடும்பத்தால் பரிசுத்த ஸ்தானத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பெற்ற பூசைப்பாத்திரம் ஒன்றும் தரிசகர்களின் உள்ளத்தை ஈர்ந்துகொள்ளுகின்றது. ஏனெனில், “பிளாற்றினம்” எனப்படும் குருலோகங்கொண்டு செய்யப்பட்ட முதலாவது பூசைப்பாத்திரம் அதுவேயாகும். இன்னும் சம்பேதுரு, பாவிலு அப்போஸ்தலர்கள் திருநாளிலே அர்ச். பேதுருவானவர் திருச்சுரூபத்தின் சிரசில் சூட்டப்படுகின்ற 17-ம் நூற்றாண்டைச்சேர்ந்த அதிகம் பாரமான மும்மடிக்கிரீடம் — அதாவது பாப்பானவரின் மகுடம்ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இது எந்தஒரு பாப்பானவரும் சிரசிலே தரிக்கமுடியாத அத்துணைபெரும் பாரமானது. இன்னும் 15-ம் நூற்றாண்டிலே திருச்சபையை ஆட்சிபுரிந்த 4-ம் சிக்ஸ்துஸ் பாப்பானவரது “செம்படவர் கணையாழி” ஒன்றும் காட்சியிலே இடம்பெற்றுள்ளது.

—*—

# 60 அடி உயரமான வெண்கலச் சுரூபம்

ஐக்கிய அமெரிக்கதேச நியூயோக் இராச்சியத்தின் எல்லைப் புறவீதியிலே ஸ்தாபிக்கப்படவிருக்கும் பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் ஒன்றைப் பரிசுத்த பாப்பரசர் ஆசீர்வதிக்கலாயினர். ஓர் அமெரிக்க சிற்பியான மாட்டீன் வின்ரர் என்பவரால் செய்யப்பட்ட 60 அடி உயரமான இந்த வெண்கலச் சுரூபமானது ஆசீர்வதிக்கப்படுமாறு அரிதாகப் பாவிக்கப்படும் வத்திக்கான் றெயில்வே வாயில்வழியாக ஓர் றெயில்வேச் சாமான் வண்டி மூலம் வத்திக்கான் இராச்சியத்துள் கொண்டுசெல்லப் பட்டது. இந்தச்சுரூபம் உவைற்பிளெய்ஸ் எனுமிடத்திலே திவ்வியஇரக்கத்தின்சபைக் கன்னியாஸ்திரீமாரால் நடத்தப்பட்டுவரும் நல்லாலோசனைமாதா கல்லூரி மைதானத்திலே நிறுவிநிற்கும். இதனைச்சூழவரச் சிலுவைப்பாதை ஸ்தலங்கள் இருந்துவரும். 22 தொன் நிறைகொண்ட இந்தச்சுரூபம் பியெற்ரூ சாந்தாவிலுள்ள இத்தாலிய சமயசம்பந்தமான சிற்பநிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

---

## ஞாபக தங்கப் பதக்கங்கள்

வத்திக்கான் பொக்ஷசாலை நடத்திவரும் காட்சியிலே சரித்திரபூர்வமானவைகளாய் வைக்கப்பட்டிருப்பவை 12-ம் பத்திநாத பாப்பானவரின் ஆட்சி காலத்தில் அடிக்கப்பெற்ற 24 ஞாபக தங்கமெடல்கள் — அதாவது பதக்கங்களாகும். அவர்ஆட்சிபுரிந்த 20 பஞ்சாங்க வருடங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒன்றாக 20பதக்கங்களும், இவற்றுடன் தேவதாயார் ஆத்துமசரீரத்துடன் மோட்சாரோபணமானார் என்பது அவரால் விசுவாச சத்தியமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டதன் ஞாபகபதக்கம்ஒன்றும், அவர் நாமதேயங்கொண்ட அர்ச். ஈயூஜினின் பேரால் றோமைநகரிலே ஓர்கோவில் கட்டியெழுப்பப்பட்டதன் ஞாபக பதக்கம் ஒன்றும், அர்ச். 10-ம் பத்திநாதருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பட்டதன் ஞாபக பதக்கம் ஒன்றும், பிறசெல்ஸ் நகரில் நிகழ்ந்த சர்வதேச பொருட்காட்சியிலே வத்திக்கான் கலந்துகொண்டதன் ஞாபகபதக்கம் ஒன்றும் காட்சியளிக்கின்றன.

---

## அர்ச். வின்சென்ற் டீ போல்

அர்ச். வின்சென்ற்டீபோலின் வாழ்க்கையை வர்ணித்துக்காட்டும் பலஇனத் தபால்முத்திரைகளையும், விசேஷ வங்கிநோட்டுகளையும் பாவனைக்கு விடுமாறு பிரான்ஸியஅரசாங்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அர்ச். வின்சென்ற்டீபோல் பரமபதமடைந்த முன்னூறாம்ஆண்டு நிறைவுவிழா அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 27-ந்திகதி வருவதைமுன்னிட்டு அகிலமுழுவதிலும் அவருடைய ஞாபகார்த்தமாகப் பிரான்ஸியஅரசாங்கம் அவ்விதம் செய்யவேண்டுமென்று பிரான்ஸிய சாஸ்திரகழகத்தில் ஓர்அங்கத்தவரும், ஓர்கத்தோலிக்கபிரமுகருமான எம். ஹென்றி டானியேல் றெப்ஸ்அவர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றார். அங்ஙனம் செய்வதானது, அர்ச். வின்சென்ற் டீபோலால் ஆரம்பிக்கப்பட்டு, அவரால் அடியிடப்பெற்ற வின்சேந்திய குருமார் சபையாலும், பிறர்சிநேக குமாரத்திகள் சபையாலும் நடத்தப்பட்டுவரும் கஷ்டநிவாரண — பிறர்சிநேக தொண்டுகள் உலகமெங்கும் பிரஸ்தாபமாக அறியப்படுவதற்குப் பேருதவியாகுமென அவர் தெரிவித்திருக்கின்றார்.

—*—

# இந்தியாவும் கத்தோலிக்கரும்

இந்தியாவிலுள்ள கத்தோலிக்கரின்தொகை கடந்த மூன்றுவருடங்களிலும் நூற்றுக்குப் பத்து விகிதத்துக்குமேல் அதிகரித்திருப்பதாக அதிகம்பிந்திய கத்தோலிக்கவெளியீடு அறிவிக்கின்றது. தற்போது இந்தியகத்தோலிக்கரின்தொகை 57 லட்சத்து 17 ஆயிரத்து 600 பேர். 1950-ம் ஆண்டிலே அவர்கள்தொகை 51 லட்சத்து 72 ஆயிரத்து 420 பேர். அகில-இந்தியாவிலும் அதிகமான கத்தோலிக்கரைக் கொண்டுள்ளது கேரளஇராச்சியத்திலுள்ள சங்கனச்சேரி அதிமேற்றிராசனமேயாகும். அதில் 3லட்சத்துப் 14ஆயிரத்து 691கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். திருச்சூர்மேற்றிராசனமும் 3லட்சத்துக்குமேற்பட்ட கத்தோலிக்கரை— அதாவது 3லட்சத்து 6ஆயிரத்து 223 கத்தோலிக்கரைக் கொண்டிருக்கிறது. இந்தியாவில்தற்போது தொண்டாற்றிவருகின்ற 5,860 கத்தோலிக்க குருமாரில் 4,448 பேரும் இந்திய குருமாரே. கோவா அதிமேற்றிராசனமும், மற்றும் பதினைந்து அதிமேற்றிராசனங்களும் உட்படத் தற்போது 71 மேற்றிராசனங்கள் இருக்கின்றன. அவற்றிலே நான்கு துணைமேற்றிராணிமார்உட்பட மேற்றிராணிமாரும், அதிமேற்றிராணிமாருமாக 68 பேர் இருந்துவருகின்றார்கள்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

---

## புரட்டாசி மாதம்

பொதுக்கருத்து: கிறீஸ்தவகுடும்பங்களில் திருச்சபைக்காக உழைக்கும் உணர்ச்சி செழித்தோங்கும்படியாக வேண்டிக் கொள்வது.

வேதபோதககருத்து : தென் ஆபிரிக்க சாதிபேதச்சச்சரவு கிறீஸ்தவகொள்கைக்கொப்ப ஒதுக்கப்பட வேண்டுமென மன்ருடிக்கொள்வது.

*　　*　　*

## காலை ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 3-ந் திகதி

## திருச்சபைவெற்றிகொள்ளும்

“நான் உனக்குச்சொல்லுகிறேன்: நீ இராயாய் இருக்கிருய். இந்தஇராயின்மேல் என் திருச்சபையைக்கட்டுவேன். நரகத்தின்வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது” என்று நமது இரட்சகராகிய கிறீஸ்துபெருமான் திருவாய்மலர்ந்து பேதுரு என்னும் கற்பாறையின்மேல் அன்றுகட்டியெழுப்பிய கத்தோலிக்கதிருச்சபையை அழித்துவிடுவான் கடந்தஇருபதுநூற்றுண்டுகளிலும் சக்கிரவர்த்திகளென்றும், அரசர்களென்றும், இராச்சியஅதிகாரிகளென்றும், நாஸ்திக தலைவர்களென்றும் எத்தனையோ வீரவான்கள் கங்கணங்கட்டியெழுந்தார்கள். பிரசண்டமாருதம்போன்று பயங்கரவேதகலாபனைநடாத்திவந்தார்கள். கிறீஸ்தவர்களைச் சித்திரவதைசெய்தும், சிரச்சேதஞ்செய்தும், மனுத்தன்மையற்றவிதமாய் வாதைவேதனைசெய்தும் கிறீஸ்துவேதத்தை ஆரம்பத்திலும், பின்னர் காலந்தோறும் குழிதோண்டிப்புதைக்க முனைந்தார்கள். அதனுல் கோடிக்கணக்கான கிறீஸ்துவின்பக்தர்கள் வேதசாட்சிகளாகி உயிர் துறந்தார்கள். அவர்கள்சிந்தியகுருதி எங்குமே ஆறுகப்பெருக்கெடுத்துப்பாய்ந்தது. திருச்சபையை அழித்துவிடுவேனென்று ஆதியில் நீரோ அறைகூவினுன். திருச்சபையை அழித்தொழித்துவிடுவேனென்று அற்றிலா அட்டகாசஞ்செய்தான். திருச்சபையைப் பரிகாசமாக்கிவிடுவேனென்று பிஸ்மாக் முழக்கஞ்செய்தார். திருச்சபையைப் பாழாக்கிவிடுகிறேனென்று அடல்வ் ஹிற்லர் கர்ச்சனைசெய்தார். ஈற்றில், திருச்சபையை இதோ! ஒருகை பார்க்கிறேனென்று யோசெவ் ஸ்ராலின்எழுந்தார். இவர்களெல்லாம் தங்கள்குறிக்கோளிலே வெற்றிகாணுவான் வேண்டி எடுக்காதஎடுப்பெல்லாம் எடுத்தார்கள்; திருச்சபையைப் படுத்தாதபாடெல்லாம் படுத்திஞர்கள். கயிறைமணலாய்த்திரித்தார்கள். வானத்தைவில்லாய் வளைத்தார்கள். ஆனுல்,வெற்றி கண்டார்களா? திருச்சபையை அழித்துவிட்டார்களா? ஒழித்துக்கட்டி விட்டார்களா? அடிபாற விழுத்திவிட்டார்களா? இல்லை. ஆனுல், அதனை அழிக்களழுந்த அவர்களே, ஒழிக்கமுனைந்தஅவர்களே அழிந்தார்கள், ஒழிந்தார்கள், அடிபாறிவிழுந்தார்கள். ஆனுல், திருச்சபையோ அங்கிங்கு அசையாது, அடிபெயராது, வைரமலைபோன்று இன்னும் நிலைபெற்று நிலவுகின்றது. “எல்லாருமேறி இளைத்தகுதிரையிலே சாஸ்திரியாரேறிச் சறுக்கிவிழுந்தாராம்” என்பதற்கிணங்க, கடைசியாகக் கம்யூனிஸமென்ற நாஸ்திகவேதாளம் அதனைஉலுப்பத்தொடங்கியது. இன்னமும் உலுப்பிக்கொண்டேயிருக்கிறது. இல்லை, இல்லை, அதனைப்பார்த்து உறுமிக்கொண்டேயிருக்கிறது. கம்யூனிஸ்தர்களும், கம்யூனிஸ்த தலைவர்களும் கத்தோலிக்கரை—கத்தோலிக்கதிருச்சபையை எதிர்க்கும்போதெல்லாம்— ஆவேசத்துடன் அதற்குஎதிரிடை செய்யும்போதெல்லாம் தங்கள் தோல்வித்தானத்தை அவர்கள் உலகுக்குக் காட்டாமற்காட்டிக் கொள்ளுகின்ருர்கள். கடவுளை எதிர்ப்பதும், கடவுளே இல்லையென்று அவரைமறுப்பதும், கடவுள்பக்தர்களை இம்சித்துத் துன்புறுத்திக் கொன்றழிப்பதும், கடவுள்வழிபாட்டுத்தலங்களை அநாசாரப்படுத்துவதுமாகியவெல்லாம் கம்யூனிஸம் என்ருேஒருநாள் அழியுமென்பதற்கான அறிகுறிகளாகும். ஏனெனில், அரசன்அன்றறுப்பான். தெய்வம் நின்றறுக்கும். துன்புறுத்தப்படும் திருச்சபை தனதுசத்துராதிகளை வெற்றி கொள்ளும் என்பது திண்ணம். ஏனெனில்,அது தேவனுடையது. ஏனெனில், பரமதிரீத்துவத்தின் இரண்டாம்ஆளாகிய கிறீஸ்துநாதரின் பாதுகாவலையும், உதவியையும் அதுகொண்டிருக்கிறது. கிறீஸ்துநாதர் கடவுள். “நரகத்தின்வாசல்கள் அதைமேற்கொள்ளமாட்டாது.” — “இதோ நான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுஇருக்கிறேன்” என்பன அவரின்திருவாக்குகள். அதனுல்அவர் தமதுவாக்கில் ஒருபோதுமே தவறமாட்டார் என்க.

---

## இந்திய–செஞ்சீன நிலை

நிகழும்புரட்டாசிமாதம் 15-ந்திகதிவரையிலே ருஷியபிரதமர் நிகிதா குருஷேவ் ஐக்கிய அமெரிக்கதேசஞ்சென்று அங்கேஇருவாரகாலம் சுற்றுப்பிரயாணம் செய்வாரென்றும், அதனைத் தொடர்ந்து அமெரிக்கஜனுதிபதி ஐஸன்ஹாவரும் சோவியத்ருஷியாவுக்குச்சென்று அங்கே சில தினங்கள் சுற்றுப்பிரயாணம் நடத்துவாரென்றும் சமீபத்தில் வெளியான செய்தியை உலகிலுள்ள பல்வேறுநாடுகளின் தலைவர்களும் வரவேற்ருர்கள். இருபெருந்தலைவர்களும் சந்திப்பதானது உலகசமாதானத்துக்கு உகந்தஓர்சூழ்நிலையை உருவாக்கித் தற்போதுநிலவிவரும் கெடுபிடியுத்தத்தைத் தணிக்கஏதுவாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ருஷியபிரதமரின் அமெரிக்க விஜயத்தைமுன்னிட்டு அமெரிக்க ஜனுதிபதி தற்போது ஐரோப்பாவுக்குச்சென்று மேற்குஜேர்மனி, பிரித்தானி, பிரான்ஸ் முதலாம்நாடுகளின் அரசியற் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகின்ருர். அவைகளைமுடித்துக்கொண்டு அவர் அமெரிக்காவுக்குச்சென்று ருஷிய பிரதமரை வரவேற்றுச் சம்பாஷணைகள் நடத்துவார். ஆனுல், ருஷியாவுக்கும், போலாந்துக்கும் சமீபத்திலே விஜயஞ்செய்துவிட்டுத் தமதுநாட்டுக்குத் திரும்பியஅமெரிக்கஉபஜனுதிபதி நிக்ஸன்அவர்கள் இருவரினதும் சம்பாஷணைகளினுல் அதிகநன்மைகள் ஏற்படுமென்று எதிர்பார்க்கக்கூடாதெனத் தெரிவித்திருக்கின்ருர்.

இந்தநிலைமையில் ஏற்கனவே திபேத்தை ஆக்கிரமித்துள்ள கம்யூனிஸ்த சீனப்படைகள்—அதாவது செஞ்சீனப்படைகள் இந்தியாவின் வடகிழக்குஎல்லைப்புறமாக இந்தியாவில் கால்வைத்திருக்கின்றன. செஞ்சீனப்படைகள் திபேத்தை ஆக்கிரமித்தபொழுது, அவைகளின் அடுத்த இலக்கு இந்தியாவாகத்தான் இருக்குமென்று பலரும் எச்சரித்தார்கள். குருஷேவ்–ஐஸன்ஹாவர் சந்திப்புக்கான ஆரம்ப நடவடிக்கைஎடுக்கப்படும்போது செஞ்சீனப்படைகள் எங்கேயோ இரண்டொருஇடங்களில் ஆக்கிரமிப்பிலே இறங்குமென்று பலரும் முன்னதாக உணர்ந்து எச்சரிக்கைவிடுத்தார்கள். அவர்களின் எச்சரிக்கை இன்று உண்மையாகிவிட்டது. இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புறத்திலுள்ள லாங்ஜு, ஸியாங், லோஹித் எனுமிடங்களையும், மாக்மோஹன் எல்லைக்கருகேயுள்ள சில இந்திய பாதுகாப்புநிலையங்களையும் செஞ்சீனப்படைகள் ஆக்கிரமித்திருக்கின்றன. அவைகளின் ஆக்கிரமிப்பு அத்துடன் நின்றுவிடவில்லை, இன்னமும்தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புறத்தில் செஞ்சீனப்படைகள் பிரவேசித்தது நிச்சயமாக ஓர்ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகுமென்று இந்திய பிரதமர் நேரு ஒப்புக்கொள்ளுகின்ருர். ஆனுல், இதுசம்பந்தமாய் அப்பகுதியிலே படைகளைப் பெருக்கி எல்லையைப்பாதுகாக்க வேண்டுமென்றும், பேச்சுவார்த்தைகள்மூலம் தகராறைத்தீர்க்க முயலவேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்ருர். செஞ்சீனப்படைகளின் ஆக்கிரமிப்பாலே சீனுவின்எல்லைப்புறமாக இந்தியாவின் பாதுகாப்பிலுள்ள லடாக், நேபாளம், பூட்டான் ஆகிய சிறுநாடுகளுக்கும் ஏதேது நேருமோவென்ற அச்சம் எழுந்துள்ளது.

கம்யூனிஸ்தசீனு இன்று தனது சுயரூபத்தைக் காட்டிவிட்டது. ஓர்ஆசியநாடு என்றமுறையில் செஞ்சீனுவைப் பிரதமர் நேரு ஆதரித்தார். ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே நவசீனுஎன்று அறியப்படுகின்ற செஞ்சீனுவையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆரம்பமுதல் கிளர்ச்சி செய்தார். செஞ்சீனுவுக்காக உலகில் தம்மைப்போல் பரிந்து பேசியவர் வேறெவருமே இல்லையென்று சொல்லக்கூடிய வகையிலேஅவர்பெயர்வகித்தார். 1955-ம் ஆண்டு பாண்டுங்நகரில்நிகழ்ந்த ஆசிய — ஆபிரிக்கமகாநாட்டிலே ஆசியநாடுகள்எதையும் செஞ்சீனு ஆக்கிரமிக்காதென்று அழுத்தமாகப்பேசினுர். சீனப்பிரதமர் சௌ-என்-லாய். அயல்நாடுகளுடன் அன்புறவை வளர்ப்பதுதான் செஞ்சீனுவின் லட்சியமென்று அழகாகப்பேசிப் பஞ்சசீலஉடன்படிக்கையில் கைச்சாத்துமிட்டார். அங்ஙனமாகசெஞ்சீனு இந்தியாவில் இன்றுகைவைத்துவிட்டது. இதுசெய்தி உலகையே கலக்கிவிட்டது. செஞ்சீனுவின் அடாத்தான ஆக்கிரமிப்பாலே இந்தியாவுக்கும், சீனுவுக்கும் போர்மூண்டு கொள்ளுமானுல் அது இருநாடுகளுடனும் மாத்திரம்நின்றுவிடுமென்று நினைப்பதற்கிடமில்லை. சீனுவுக்கு அதன்தோழனுன சோவியத்ருஷியா துணைச்செய்தால், இந்தியாவுக்கு ஏனையநாடுகள் துணைச்செய்தால், மற்ருேர் உலகயுத்தம் மூண்டுகொண்டால் அதன்விளைவு யாதாகும்?

---

### மாணவர்களின்தண்டனை

அரசாங்கபரீட்சைகளிலே ஒழுக்கத்தவறுய் நடந்துகொள்ளும் மாணவர்கள் இருவருடங்களுக்குப் பரீட்சை எதிலும்தோன்ருது கல்விப்பரீட்சைப் பகுதியால் தடுக்கப்பட்டிருந்தார்கள். தற்போது இருவருடங்களுக்குப்பதில் ஒருவருடத்துக்கு அவர்களைப் பரீட்சைகளில் தோற்றமுடியாமல் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### பெரியமடுக் குடியேற்றதிட்டம்

பெரியமடுக் குடியேற்றதிட்டத்தின் கீழ் மேலும் 53காணித்துண்டுகளிலே குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான காணிக்கச்சேரி ஒன்று சென்ற24-ந்திகதிநடைபெற்றது. காணிகேட்டு மனுப்பண்ணியவர்களில் 37குடும்பங்களுக்குக் காணிகள்வழங்கப்பட்டன. மீதியான காணித்துண்டுகளை வழங்குவதற்கான காணிக்கச்சேரி விரைவிலே நடைபெறுமெனத் தெரியவருகிறது

### இலங்கைச் சங்குகள்

மன்ஞர்ப்பகுதியிலுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள்பலவற்றின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக் கடலில் குளிக்கப்படும்சங்குகளை இலங்கையிலும் பயன்படுத்திப் பலவிதசங்கு ஆபரணங்களை உற்பத்திசெய்யும் வழிவகைகளைக் கண்டுபிடிப்பதற்குக் குடிசைக்கைத்தொழில் கிராமாபிவிருத்திப்பகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கிராமாபிவிருத்திப் பகுதித் தலைவர் கேட்டுக்கொண்டதின் பேரிலே பலவினமான ஓர்குறிப்பிட்ட அளவுசங்குகளைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### அரசாங்க காரியாலயம்

யாழ்ப்பாணத்திலே தற்போதுள்ள கச்சேரிக்குப்பதிலாக அரசாங்க புதிய காரியாலய கட்டடம்ஒன்றைக் கட்டுந்திட்டம் பின்போடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பணத்தட்டுப்பாடே இதற்குக்காரணமென்று திறைசேரி தெரிவித்திருக்கிறது. ஆயினும் தற்போதையகச்சேரியில் இருந்துவரும் இடத்தட்டுப்பாட்டைச் சமாளிக்குமாறு புதியகட்டடங்கள் அமைப்பதற்கென்று 45ஆயிரம்ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# சுதேச வர்த்தமானம்

### சுகாதாரமந்திரியின் விஜயம்

சுகாதாரமந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா தனதுயாழ்ப்பாண விஜயத்தை இரண்டாம்முறையாகப் பின்போட்டிருக்கின்றூர். இந்தப்புரட்டாசிமாதம் 1-ந்திகதியன்று இங்குவிஜயஞ்செய்ய விருந்ததைமுன்னிட்டு அவரைவரவேற்பதற்கென அரசாங்க அதிகாரிகள் பாக்கஆயத்தஞ்செய்திருந்தார்கள். ஏனெனில், சுகாதாரமந்திரியாய்வந்த பின்னர் அவரின் முதலாவது யாழ்ப்பாணவிஜயம் இதுவாகும். ஆனால், மந்திரிசபையில் அத்தியாவசியக வேலைகள் இருப்பதைமுன்னிட்டு அவரின் யாழ்ப்பாணவிஜயம் பின்போடப் பட்டிருப்பதாகச் சென்றவெள்ளிக்கிழமை அறிவிக்கப்படலாயிற்று. அதிகம்முந்தியஓர்திகதியிலே இனி அவர் யாழ்ப்பாணம்வருவாரெனத் தெரியவருகிறது.

### புத்தளறெயிற்பாதை

புத்தளறெயில்பாதைவேலையில் பெரும்பகுதி அடுத்தபுதிய நிதிவருடத்தில் பூர்த்தியாகிவிடுமெனத்தெரியவருகிறது. இந்தவேலைத்திட்டத்திற்கு அடுத்தநிதிவருடத்தில் 20லட்சம்ரூபா செலவிடப்படுமென றெயில்வே மனேஜர் தெரிவித்திருக்கின்றூர். புத்தளறெயிற்பாதைவேலையில் ஏற்கனவே ஒருமைல்தூரம்வரை முடிந்துவிட்டது. அதற்குத்தேவைப்படும் சிலிப்பர்கட்டைகளை வனபரிபாலன பகுதி உதவிவருகின்றது.

### இலங்கைத் தேசீயவருமானம்

இலங்கையின் தேசீயவருமானம் சென்ற1958-ம்ஆண்டில் 549கோடியே 30லட்சம்ரூபாவாகும். இது முந்திய வருடத்திலும் 29கோடியே 30லட்சம் ரூபா அதிகமாகும். இலங்கைக்கு வருடந்தோறும் இதுவரைகிடைத்துவந்த தேசியவருமானங்களில் இதுவே மிகஉயர்ந்தது. உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள்மூலமே அதிகவருமானம் கிடைத்துள்ளது. சென்ற1958-ம்ஆண்டில் இந்தஏற்றுமதிப்பொருட்களால்மட்டும் 161கோடியே 30லட்சம்ரூபா வருமானம் கிடைக்கலாயிற்று.

### வாக்காளரின் அடையாளச்சீட்டுகள்

இலங்கையிலே வாக்காளர்இடாப்பிலுள்ள 45லட்சம்வாக்காளரினதும் அடையாளச்சீட்டுகளைப் புகைப்படங்களுடன் தயாரிக்கமுன்வரும் புகைப்படக் கம்பெனிஒன்றை அரசாங்கம் தேடிவருகின்றது. இதுசம்பந்தமாக உதவிபுரியும்படியாய்த் தேர்தல்கம்மிஷனர் இலங்கையின் வெளிநாட்டு ஸ்தானிகர்களுக்கும், உள்நாட்டுப் புகைப்படக் கம்பெனிகளுக்கும் கடிதங்கள் அனுப்பியிருக்கின்றூர். அடையாளச்சீட்டுகள் எப்படி இருக்கவேண்டுமென்றும் அவர் விளக்கியிருக்கின்றூர்.

### திரு. பிலிப் குணவர்த்தனவழக்கு

உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனறல் திரு. சிட்னி டிசொய்சாவை அவமானப்படுத்தியதாக முன்னாள் உணவுமந்திரி திரு. பிலிப் குணவர்த்தனமீது தொடரப்பட்டுள்ளவழக்கிலே மேலும்விசாரணை நடத்தும்படியாக அற்றேர்ணி ஜெனறல்விடுத்த கட்டளையைத்தொடர்ந்து கொழும்புப் பிரதம மஜிற்றேற் சாட்சிகள்மூவருக்குச் சமன்ஸ்அனுப்பியிருக்கிறூர். உத்தியோகமொழிப்பகுதி உதவிக்கம்மிஷனர் டக்றர்என். டி. விஜேசேகரா, 'ரைம்ஸ்'பத்திரிகைநிருபர் திரு. நோட்டன் வீரசிங்க, றேடியோசிலோன் உதவிஎஞ்ஜினியர் திரு. டி. புவெல் என்பவர்களேமூன்றுசாட்சிகளுமாவர். விசாரணை இம்மாதம்19-ந்திகதியன்று நடைபெறவிருக்கிறது.

### பொன்னம்பலம் உருவச்சிலை

தமிழ்காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்றத்திலே யாழ்ப்பாணப்பிரதிநிதியுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் 25வருடகால அரசியல் சேவைகளின் ஞாபகார்த்தமாக அவரது உருவச்சிலைஒன்றை நிறுவுவதென்று ஏற்கனவேசெய்திருந்த தீர்மானத்தை வெள்ளிவிழாச்சபை இபபொழுது கைவிட்டுவிட்டதெனத் தெரியவருகிறது. உயிருடனிருக்கும் ஒருவருக்கு ஞாபகார்த்தஉருவச்சிலை நிறுவவேண்டியது சரியல்லவென்ற யோசனையைமேற்கொண்டே வெள்ளிவிழாச்சபை இத்தீர்மானத்தைக் கைவிட்டுவிட்டதாக அதன்அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மற்றேர் பெரியஆஸ்பத்திரி

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மற்றும்ஒருஆஸ்பத்திரி அவசியம் தேவைப்படுகிறது; அதனுல் பருத்தித்துறைஆஸ்பத்திரியை அன்றேல் சாவகச்சேரிஆஸ்பத்திரியை ஒருபெரிய ஆஸ்பத்திரியாக ஆக்கவேண்டுமென்று கேட்கும் பிரேரணைஒன்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரி ஆலோசனைச்சபையின் கடந்தகூட்டத்தில் நிறைவேறியிருக்கிறது. திரு. சி. முத்துத்தம்பிஅவர்கள் எடுத்தாண்ட இப்பிரேரணையிலே யாழ்ப்பாணப் பெரியஆஸ்பத்திரியில் நோயாளிகளின்தொகை அதிகரித்துவருவதினுல் ஏற்பட்டுள்ளநெருக்கடியைத் தீர்ப்பதற்கு யாழ்ப்பாணமாவட்டத்திலே மற்றும்ஓர்பெரிய ஆஸ்பத்திரி இன்றியமையாததாகும்; மன்னூர், முல்லைத்தீவு, வவுனியா முதலிய இடங்களிலிருந்தும் நோயாளிகள் சிகிச்சைபெறுவதற்காக யாழ்ப்பாணப் பெரியஆஸ்பத்திரிக்கு வருகின்றூர்கள்என்று கூறப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணப் பெரியஆஸ்பத்திரியில் போதியஇடவசதியின்மையால் கண்வைத்தியசாலை, காதுவைத்தியசாலை, தொண்டைவைத்தியசாலை ஆகியவற்றை மற்றேர்கட்டடத்துக்கு மாற்றும்படிகேட்கும் மற்றேர்பிரேரணையும் கூட்டத்திலே நிறைவேற்றப் பட்டுள்ளது.

### கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரி

யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரிப்பகுதிநோப் போதனுசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. அத்துடன் 1959–60-ம்வருடப் பயிற்சிக்கானவிண்ணப்பங்களும் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டிருக்கின்றன. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித்தினம் நிகழும்புரட்டாசி மாதம் 21-ந்திகதியாகும். தமிழிலும், ஆங்கிலத்திலும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, வர்த்தககணிதம் ஆகியன உட்படப்பலபாடங்களிலே பயிற்சி அருளப்பட விருக்கின்றன.

### தொழில்நுட்பப் பயிற்சிக்கலாசாலை

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியிலுள்ள "சிற்றுடல்"எனும் கட்டடத்திலே கம்பெனிஒன்றினுல் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பயிற்சிக் கலாசாலை சென்ற26-ந்திகதி புதன்கிழமை திறந்துவைக்கப்படலாயிற்று. யாழ்ப்பாணத்திலுள்ள படித்தஇளைஞர்கள் தொழில்நுட்ப கைத்தொழில் துறைகளில் பயிற்சிபெறச் சந்தர்ப்பம் அளிக்கும் முதலாவதுமுயற்சியாக அக்கம்பெனி இதனை ஆரம்பித்துள்ளது. பொறியியல், கைத்தொழில் நிலையங்களைச் சிறியஅளவில்தொடக்கி வேலையற்றேருக்கு வேலைவசதிஅளித்தலும் இந்தக்கம்பெனியின் நோக்கங்களில் ஒன்ருகும்.

### மரணப்படுக்கையிலே சிற்றரசர்

ஆபிரிக்காவிலே நையசலாந்து நாட்டில் அதிக காலங்கண்ட சிற்றரசரும், 99வயதுடையவருமான கலுலுமா சமீபத்திலே தனது மரணப்படுக்கையில் வண. ஹென்றி ஸ்ரம்ப் சுவாமியாரால் ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கராயினர். 71 வருடகாலம் சிற்றரசராய் விளங்கியிருந்தஇவர் தனது நாட்டிலே வேதபோதக தொண்டு நடத்துமாறு ஓர்மிஷனை ஆரம்பிக்க வெள்ளைக் குருமாரென அறியப்படுகின்ற கத்தோலிக்க குருமார் அங்குசென்றபோது இவர் அவர்களை வரவேற்றுநின்றூர். சத்தியவேதத்தின்மட்டிலே இவருக்குண்டான கரிசனை அதிகரிக்கவே அவர் ஓர் ஞானஸ்நான ஆயத்தகாரராகி வேதகாரியங்களைத் தொடர்ந்து படிப்பதற்காக அநேகம்முறைமிஷனுக்குநடந்து சென்றூர்.

---

### புறெட்டஸ்தாந்தரும் கத். ஞானுபதேசமும்

டென்மார்க்கிலே பிரசுரமாகும் "றிபோமேற்றியோ" என்ற டேனிஷ் புறெட்டஸ்தாந்த சஞ்சிகையானது அங்குள்ள உயர்தர புறெட்டஸ்தாந்த சபைப் பாதிரிமார் கத்தோலிக்க ஞானுபதேசப் புத்தகத்தை உபயோகிக்குமாறு சிபாரிசு செய்திருக்கின்றது. டேனிஷ் மக்களின் புறெட்டஸ்தாந்தசபை ஓர்புதிய ஞானுபதேசத்தைப் பெற்றுக் கொள்ளுகிறவரையிலே பாடசாலைகளில் படிப்பிப்பதற்கென்றும், உறுதிப்பூசுதல் வகுப்புகளுக்கென்றும் கத்தோலிக்க ஞானுபதேசப் புத்தகத்தை அவர்கள் பிரயோகிக்க வேண்டுமென்று அது ஆலோசனை கூறியிருக்கின்றது. டேனிஷ் கத்தோலிக்க ஞானுபதேசப் புத்தகம் ஒன்றுசேர்த்த ஜேர்மன் ஞானுபதேசப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். இது சென்ற கிறிஸ்மஸின் போதே பிரசுரஞ் செய்யப்படலாயிற்று.

---

● இங்கிலாந்திலேட்றம்மனூர்எனுமிடத்திலே 105வயதுடைய திருமதி பிறிஜித் மைக்கேண்எனும்பாட்டி சமீபத்திலே தனதுபேரப்பிள்ளையான வண. தாடியஸ் குயின்சுவாமியார் குருப்பட்டம்பெற்றபின் தனதுவீட்டிலேயே திவ்வியபூசை நிறைவேற்றுவதைக் காணும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக் கொண்டாள். அவ்வேளை சுவாமியாரின் தாயாரும், சகோதரும், பிறரும் அங்கு சமுகமாயிருந்தார்கள்.

### தாதிமார்பயிற்சிக் கலாசாலை

யாழ்ப்பாணத் தாதிமார்கலாசாலையைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டனவென்று சுகாதாரமந்திரி தெரிவித்திருக்கின்றூர். இந்தக் கலாசாலைக்குவேண்டிய தராதரப்பத்திரம்பெற்ற ஆசிரியைகளைத் தெரிந்தெடுக்கவும் சுகாதாரபகுதி முடிவு செய்திருக்கிறது. மூன்றுஆசிரியைகள் தெரியப்படவிருக்கின்றூர்கள். சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த அரசாங்க "கெசற்"றிலே ஆசிரியைகளுக்கான விளம்பரம் வெளிவந்திருக்கிறது. உள்நாட்டிலோ அன்றேல் வெளிநாட்டிலோ ஆசிரியைகள் தெரிவுசெய்யப் படுவார்கள்.

### மாதாவின் ஜனன மகோற்சவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானிடசென்மங்களைப் போலல்லாது சென்மபாவதோஷம் சிறிதும்அணுகாது, பிரியதத்தத்தினுல் பூரணமாக நிரம்பப் பெற்றுச் சென்மித்துப் பிறந்த அன்னையின் பிறந்ததிருநாளை ஒரு புனிதநாளாகக்கொண்டு தூய இருதயங்களுடன் கொண்டாடுவோமாக!

---

### லூர்துபதிப் புதுமைகளும் லூத்தேர்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வங்கள் வீண்மனேபாவனை, பரம்பரையான விநோதகதையென்றபகுதியில் ஒதுக்கிவிடப் படக்கூடியனஅன்று."

நிற்க, கத்தோலிக்கரும், புறெட்டஸ்தாந்தருமாகிய இருபாலார் மத்தியிலும் அதிகம்கவனத்தை ஈர்ந்துகொள்ளத்தக்கதாய் அவர் மேலும் தெரிவித்திருப்பது வருமாறு: "றேமான்கத்தோலிக்கதிருச்சபையைச்சேர்ந்த பக்தியுள்ளமக்கள் எங்காகிலும் இயற்கையைக்கடந்த உலகின் அற்புதகாட்சிகளைக் காணும்போதும், கன்னிமரியம்மாளின் காட்சிகளைப்பெறும்போதும் நாம் ஆச்சரியப்படக்கூடாது. அத்தகைய சுபாவத்துக்குமேற்பட்ட காட்சிகளின் உண்மை சமுசயத்துக் கிடமாவதில்லை. ஏனெனில், அதனுல் வெளிப்படுகின்ற மனேபாவம் எமக்கு அந்நியமாய் இருக்கின்றது. இன்னும் யாத்திரைகளில் கலந்துகொள்வதும், செபத்தின் யதார்த்தமும் உலகவாழ்க்கையில் தானும் பிரத்தியட்சமான அனுகூலங்களைக் கொண்டிருக்கமுடியும். இத்தகைய அனுபவங்களின் உண்மைத்தன்மையானது எவ்வளவாக நாம் குற்றம்பிடிக்கக் கூடியதாயிருந்தாலும் காரியமில்லை, சந்தேகிக்கப்பட முடியாததாகும். லூர்துபதிக்குப் போகிறவர்கள் செய்கின்றசெபங்களின் முக்கியத்துவத்திலும், பயபக்தியிலும் சந்தேகிக்க நமக்குஉரிமையில்லை."

---

● அருளப்பபாப்பரசரின் முதலாவதுவருடஆளுகையின் ஞாபகார்த்த பதக்கங்கள் பொன், வெள்ளி, வெணகல லோகங்களில் வார்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் ஓர்புறம் லூர்துபதியின் காட்சிஒன்றைக் கொண்டிருக்கிறது. பாப்பரசர் கருதினுல் றெங்கல்லியென அறியப்பெற்றிருந்தபோது அவரே சென்றவருடம் பங்குனி மாதம் அத்திருப்பதியில் அர்ச். 10-ம் பத்திநாதரின் மகாதேவாலயத்தை அபிஷேகஞ் செய்யலாயினர்.

* * *

● சுதந்திரஅயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின் நகரிலே ஓர் முன்னைநாள்பரிஸ்றரான வண. அம்புறேஸ் ஸ்ரீன்சுவாமியார் அன்றுகுருப்பட்டம்பெற்றபோது அவருடைய நண்பர்களும், உடன்வழக்கறிஞர்களும் அவருக்கு ஓர்தங்கப்பூசைப் பாத்திரத்தை அன்பளிப்புச்செய்தார்கள். 1946-ம்ஆண்டு ஓர்பரிஸ்றராக அ[illegible]கேறியஇவர் 1954-ம்ஆண்டு குருப்பட்டத்துக்குப்படிக்கத் தீர்மானித்தநாள்வரையிலே நீதிஸ்தலங்களில் வழக்குகள்பேசிப் பிரஸ்தாபம்பெற்றிருந்தார்.

# ஆர்ஸ் கண்ட அதிசய ஆயர்

[சுவாமி மரியருள் தம்புராஜ் — மதுரை]

1786-ம்ஆண்டு பிரான்ஸ்தேசம் அரசியல்கொந்தளிப்பில் தத்தளித்துக்கொண்டிருந்தகாலம். லயன்ஸ்நகர் அருகே டார்டில்லிஎன்ற குக்கிராமத்திலே ஜோண் மரிய வியான்னிஎன்ற குழந்தைபிறந்தது. பெற்றோர் ஏழைக்குடியானவர். அவர்களுக்கு ஆறு குழந்தைகள். ஜோண் நான்காவது குழந்தை.

ஜோண்பிறந்த மூன்ருவதுஆண்டே "சுதந்திரம்! சகோதரத்துவம்! சமத்துவம்!" என்ற ஆவேசக்குரலுடன் பிரான்ஸியபுரட்சி எழுந்தது. ஆலயங்கள்அடைக்கப்பட்டன. பிரமாணிக்கமுள்ளகுருமார் வாளுக்குஇரையாயினர். ஒருசிலகுருமார் சமர்த்துடன் கிராமப்பகுதிகளில் ஒளிந்திருந்து மக்களுக்குப் பணியாற்றினர். இந்நிலையில் ஜோண் வியான்னி முதல்பாவசங்கீர்த்தனம் செய்வதற்குள் 11வயதை அடைந்தான். 13-ம்வயதில்தான் புதுநன்மை வாங்கினுன். உறுதிப்பூசுதல் பெறும்போது வயது21.

காலப்போக்கிலே சமயசுதந்திரம் சிறுகச்சிறுக அனுமதிக்கப்பட்டது. டார்டில்லிக்கு வெகுஅருகாமையிலுள்ள எக்குல்லிஎன்ற பங்கிற்குச் சுவாமி பாலிஎன்ற ஒருகுருவானவர் வந்தார். பயங்கரபுரட்சியின்போது இதே பாலிசுவாமிகளை வியான்னி குடும்பத்தினர் ஒளித்துவைத்திருந்து பராமரித்ததுஉண்டு. பாலிசுவாமிகளைக் கண்டதும் இளைஞர்வியான்னியின்உள்ளம் பரவசமடைந்தது. அப்போது தனதுஇதயத்தின் ஆழத்தில்எழுந்த ஆர்வமிக்க ஆசைஒன்றை அவர்வெளியிட்டார். "சுவாமி நான் குருவாக வேண்டுமென்று எவ்வளவோ ஆசை; ஆனுல், என்ஏழ்மையையும் படிப்பற்றநிலையையும் எண்ணும்போது என்சிந்தனை மருளுகிறது."

சுவாமி பாலி அனுதாபத்துடன் செவிமடுத்தார். வியான்னியின் கண்களை உற்றுநோக்கினுர். இறையன்பும், ஆன்மதாகவேகமும் சுடர்விட்டன அந்தஇருவிழிகளில். "வியான்னி, கலங்காதே! என்னுடன் தங்கியிருந்து திருமறைபயிலுவாய்" என்ருர். தனது19-ம்வயதில் வியான்னி பாலி சுவாமிகளிடம் பயிலத்தொடங்கினுர். ஆனுல், அந்தோபரிதாபம்! பட்டிக்காட்டு விவசாயிமகன்மூளையில் இலத்தீன்மொழிபுக மறுத்தது. பன்முறை பாலிசுவாமிகள் மனமொடிந்தார். வியான்னி கண்கலங்கினுர். பலஇரவுகள் கண்விழித்து இறையருளை இரந்து மன்ருடினுர் இளைஞர்வியான்னி. கடைசியாக, ஒருவாறு பரீட்சை காலத்தை நெருங்கினுர். அப்போது ஒருபேரிடி! கட்டாயஇராணுவசேவைக்கு அழைப்புவந்தது. இளைஞர் என்னசெய்வார்?

தன்ஏமாற்றத்தையும், அழுகைக்கண்ணீரையும் தேவதிருச்சமுகத்தில் சமர்ப்பிக்க ஆலயம்சென்ருர். அழுதார். தன்னைமறந்தார். செபித்தார். செபித்துக்கொண்டேஇருந்தார். வீரர்படை இவருக்காகக் காத்துக்கொண்டிருக்குமா? நேரம்வந்ததும் வியான்னியைத்தேடினர். நல்லவேளையாக அவருடையசகோதரர் அவருடைய இடத்தைப் பூர்த்திசெய்தார். பட்டாளம் பறந்துசென்றது. அதன்பின்தான் வியான்னி சுயநினைவிற்கு வந்தார்.

பரீட்சைநாள் வந்தது. லயன்ஸ்நகர்சென்ருர். பரீட்சைஅதிகாரிகளைக் கண்டதுமே படித்தபாடமெல்லாம் பறந்துவிட்டது. பரீட்சையில் படுதோல்வி. சுவாமிபாலி இரந்து மன்ருடியதால், இரண்டாம்முறையாகப் பரீட்சைக்கு அனுமதித்தனர். வியான்னி தப்பிப்பிழைத்து ஒருவாறு தேர்ச்சிபெற்ருர். விரைவில் குருமடம் புகுந்தார். 200பேர்கொண்ட வகுப்பிலே வயதில் வியான்னிதான் முதல்வர். படிப்பிலோ 200-வதுநபர். படித்தார், படித்துக்கொண்டுதான் இருந்தார். படிப்பு ஏறினுல்தானே. ஐந்து மாதங்கள் கடந்தன. "தம்பி வியான்னி, உன்னேடு உபத்திரவப்பட எங்களால்முடியாது. வீட்டிற்குப் போ" எனச் சீட்டுக்கிழித்தார் குருமட அதிபர். வியான்னி தன்சூன்யபுத்தியைக்கண்டு நொந்தார். அவருடைய துன்பங்கண்டு சுவாமிபாலி கலங்கினுர். தாமே வேதசாஸ்திரம் பயிற்றுவித்து வியான்னியை முன்னேற்றமுயன்ருர்.

கடைசியாக 1815-ஆண்டு ஆவணி 13-ம்நாள் வியான்னி குருவாக அபிஷேகம்பெற்ருர். சுவாமிபாலியிடமே அவரை உதவிக்குருவாக நியமித்தனர். அவருடைய அறிவுத்திறமைதான் எல்லாருக்கும் தெரியுமே. அதனுல், பலமாதங்கள் பாவசங்கீர்த்தனம்கேட்க அவருக்குஉத்தரவுவழங்கவில்லை. பாலிசுவாமிகள் பக்திமான். புரட்சிகாலத்திலும் திருப்பணியாற்றத் தயங்காத தீரர். மயிர்ச்சட்டையணிந்து, மிகுந்த உபவாசத்திலும், தவத்திலும் காலங்கடத்தியவர். சுவாமிவியான்னியும் தவம்புரியத் தொடங்கினுர். இருவருக்கும் தவத்தில்போட்டி. ஒருவர் ஒருவரைப்பற்றி மேற்றிராசன அதிசிரேஷ்டருக்குப் புகார்கொடுத்தனர். இவர் சரியாக சாப்பிடுவதில்லை. போதுமானஅளவு உறங்குவதில்லை. அளவுக்குமீறி ஒறுத்தல்கள்செய்கிருர்..." என்றுஎழுதினர்.

ஈராண்டுகளாகச் சுவாமிவியான்னி ஆத்மீகஅறிவிலும், தவத்திலும் சுவாமிபாலியிடம் பாடம்பெற்ருர். பின்பு சுவாமிபாலி மரணமடைந்தார். உடனே உதவிக்குருவையே தங்களுக்குப் பங்குக்குருவாக்க வேண்டுமென மக்கள் விண்ணப்பித்தனர். ஆனுல், அந்தப்பாக்கியம் 260ஆன்மாக்களையே கொண்டிருந்த ஆர்ஸ்என்ற ஒருதூங்குமூஞ்சிப் பட்டிக்காட்டுக்குக் கிடைத்தது. "சுவாமி, அங்கே தேவசிநேகம் என்பதே கிடையாது, அதை அங்கே புகுத்துவது உங்கள் கடமை" என்று சொல்லி அதிசிரேஷ்டர் சுவாமி வியான்னியை அனுப்பிவைத்தார்.

ஆர்ஸ்கிராமத்து ஆலயத்தைக்கண்டதுமே வியான்னிசுவாமிகளின் உடல் நடுங்கியது. உள்ளம்நெகிழ்ந்தது. புரட்சிக்காரர் "பகுத்தறிவுத் தேவதையின் பாசறை"யாக அதை உபயோகித்திருந்தனர். பழுதடைந்து, இருள்படிந்து, குப்பைக்காடாகத் தோற்றமளித்தது. ஆலயமே அப்படியென்ருல், பங்குக்கிறீஸ்தவர்களைப் பற்றி என்னசொல்வது? புரட்சியின் விளைவாக விசுவாசம் மங்கிமடிந்திருந்தது. ஒருசிலர் ஞாயிறுப்பூசைக்கு வந்தனர். பெரும்பான்மையினர் கோவிலைப்பற்றியே கவலைகொள்ளவில்லை. குடியும், கூத்தும், அஞ்ஞானமும் மிகுந்திருந்தன.

வியான்னிசுவாமிகள் முதலில் தம் கரத்தாலேயே ஆலயத்தைத் துப்புரவாக்கினுர். பல்லாண்டுகளாகப் படிந்திருந்த தூசியையும், குப்பையையும் துடைத்துக்கழுவினுர். பின்னர் தமது மக்களைக்காண வீதிகளுக்குச்சென்ருர். அவரைக்கண்டும் காணுததுபோல் சிலர் சென்றனர். ஒருசிலர் அவரை நகைத்தனர். ஒருசிலர் அவரைத்தூற்றினர். அவரோ சாந்தசொரூபியாக அவர்கள் மத்தியில் உலாவினுர். விரைவில் ஒரு முடிவிற்கு வந்தார். ஆர்ஸ்பங்கைச் சீர்திருத்த இரண்டேவழிகள்தான் உண்டுஎன உணர்ந்தார். உடல்ஒடியத் தவம்புரிந்து, உள்ளம்உருகப் பிரசங்கம் செய்து மக்களை நல்வழிப்படுத்தத் தீவிரித்தார்.

துயிலைக்குறைத்தார். உணவைஒடுக்கினுர். இரும்புச்சங்கிலியால் தம்மையேபுடைத்தார். மணிக்கணக்காக ஆலயத்தில் முழந்தாளிட்டு அழுது மன்ருடினுர். இந்தச்சாந்தபுருவைப் பிரசங்கத்தொட்டியில் ஏறியதும் சீறும் புலியாக மாறியது. அக்கிரமங்களைக் கண்டித்தார். பாவஅலங்கோலங்களைச் சுட்டிக்காட்டிஅழுதார். "அன்பார்ந்த பிள்ளைகளே, இறைவனை மனநோகச் செய்யாதீர்கள்" என்று கெஞ்சினுர். "மனம்திரும்பாதபாவி, பார்! கண்ணைத்திறந்து பார்! உனக்காகத் தழல்விட்டெரியும் நரகக்குழியைப் பார்!" என அச்சுறுத்தினுர்.

உறங்கிக்கிடந்த மக்களை உலுப்பிவிட்டார். ஆலயத்தில் பக்தர்கூட்டம் பெருகியது. கிராமத்தில் அனுச்சாரங்கள் மறைந்தன. மனஸ்தாபத்தால் நொறுங்கிய உள்ளங்களோ கண்ணீர் மல்கும் கண்களோடு அணிஅணியாக மக்கள் பாவசங்கீர்த்தனத்தொட்டியை நாடினர். திவ்வியபூசை, கட்டளைச்செபம், தினசரிப் பிரசங்கம்தவிர, மீதிநேரமெல்லாம் — ஒருநாளைக்குப் 16 மணிநேரம் — பாவசங்கீர்த்தனத்தொட்டியில் அமர்ந்து, ஆன்மாக்களுக்குச் சிகிச்சையளித்தார். பலபுதுமைகளையும் செய்தார். இரவில் அவருக்குக்கிடைத்த ஒருசிலமணிநேரத் தூக்கத்தையும் பசாசுகலைத்தது.

கன்னியர், குருக்கள், மேற்றிராணிமார், செல்வந்தர், எளியவர், வணிகர், அரசியல்அதிகாரிகள்என எல்லாத்தரமக்களும் ஆர்ஸைநோக்கித் திருயாத்திரை தொடங்கினர். அப்படிமக்களைக் கவர்ந்துஇழுத்தது என்ன? சுவாமி வியான்னியிடம் இருந்த தோற்றப்பொலிவோ? அபாரஅறிவோ? அடுக்குமொழித் திறனே? அரசியல் ஆதிக்கமோ? கிடையவேகிடையாது. எனினும், ஆயிரமாயிரம்மக்களைக் காந்தமென இழுத்தது என்ன? அதுவே அவருடைய அர்ச்சியசிஷ்டதனம்!

1859ஆவணி4-ம்தேதி விடியற்காலை 2மணி. அயராஉழைப்பாலும், கடினதவத்தாலும் மெலிந்து, சோர்ந்துவண்டுகிடந்த சுவாமிவியான்னியின் உடலைவிட்டு ஆன்மாபிரிந்தது. அப்போது அவருக்கு73வயது. 43 ஆண்டுகள் ஆர்ஸ்பங்கின் ஆயராக விளங்கினுர். காமமும், கயமையும் நிறைந்த புழுதிக்காடாகக்கிடந்த அஞ்ஞானக்கிராமத்தைத் தெய்வஅன்பும், சீரியபண்பும்மிளிரும் பூக்காடாகத்திருத்தினுர். இந்தஅதிசய ஆயர் கடலையேகணடதில்லை, பரீஸ்பட்டணத்தைப் பார்த்ததில்லை, தமதுபிறந்த ஊரிலிருந்து ஒருசிலமைல்களே பிரயாணம்செய்திருந்தார். ஆனுல், அத்தகைய ஒரு "பாமர குருவை"க் காண, அவரிடம்அறிவுரையும், ஆன்ம அமைதியும்பெற, அவர்இறந்தஆண்டில் மட்டும் லட்சத்துக்கு அதிகமான மக்கள் ஆர்ஸ்குக்கிராமத்திற்கு ஓடோடியும்வந்தனர்.

அவர்இறந்து நூறுஆண்டுகள் உருண்டோடியும், அவர்புகழ் வளர்ந்துகொண்டே இருக்கிறது. 1904-இல் முத்தர்எனவும், 1925-இல் அர்ச்சியசிட்டவர்எனவும் திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்தப்புனிதரின் அழியாத்திருமேனி ஆர்ஸ் நகரில் (ஆம், அது இன்று பெருநகராகிவிட்டது) அழகியதொரு பேராலயத்தில் பூச்சியத்தோடு வளர்த்தப்பட்டுள்ளது.

ஸ்தாபனரீதியில் ஒருமித்து, பல்வேறு நவீனமுறைகளைக் கையாண்டு திறம்படத் திருப்பணிபுரிய வேண்டும் என நாம்பேசிக்கொள்கிருேம். அது உண்மைதான். ஆனுல், "சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடையநீதியையும் முந்தமுந்தத்தேடுங்கள், அப்போது இவைகள்எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும்!" (மத். 6: 33)என்ற தெய்வத்திருவாக்கை ஆர்ஸ்கிராமத்து அதிசயஆயரின் வாழ்க்கை நமக்கு ஆணித்தரமாக உணர்த்துகிறது. சேவா இயக்கத்தினரே, மாதாசபையினரே, செபஅப்போஸ்தல தொண்டர்களே, நாம்ஒவ்வொருவரும் முந்தமுந்தச் சர்வேசுரனுடைய இராச்சியத்தைத் தேடிப் புனிதவாழ்வால் நம்மைப் பண்படுத்திக்கொண்டால் நாம் என்னதான் சாதிக்கமுடியாது? —கி. இ. தாதன்

—※—

## நவசந்நியாசரும் அபேட்சகரும்

மாத்தளை

மரியாயின் பிரான்சிஸ்கன் சந்நியாசசபைத் துறவிகளாய் நான்குவாலிபர் சென்ற21-8-59-இல் நவசந்நியாசஉடையும் மற்றும்மூவர் பொஸ்தலாந்தெனப்படும் அபேட்சகர் உடையும் அணியப்பெற்றனர். கண்டி மேற்றிராசன புதியமேற்றிராணியார் மகாவந். டி. லேயோ நாணயக்கார ஒ. எஸ். பி. ஆண்டவர் அவர்களால் இந்தவைபவம் நிறைவேற்றப்பட்டது. அன்று தினம் பிறதர்மாரின் வருடாந்த ஞானவொடுக்கம் முடிவதற்கு முந்தியதினம். ஆகையால் சபைச் சகோதரர்கள் அனைவரும் அதில் பங்குபற்றினர். பெருந்தொகையான இனசனரும், அயலாரும் குழுமிநிற்கப் பத்தியருட்சிக்குரிய விதமாய் விமரிசையோடு வைபவம்நடந்தேறியது.

நவசந்நியாசர் நால்வரிலும் இருவர் "போளவத்தை"க்கிராமவிசாரணைப்பங்கைச் சேர்ந்தவர்கள். மற்றஇருவரும் "கல்கமுவா" விசாரணைப்பங்கைச் சேர்ந்தவர்கள்.

அபேட்சகர்மூவரிலும் ஒருவர் நீர்கொழும்புக் கடற்கரைத்தெரு விசாரணைப்பங்கைச்சேர்ந்த "ஏத்துக்கால்"கிராமத்தையும், மற்ருெருவர் கட்டைக்காடு விசாரணைப்பங்கைச்சேர்ந்த "பூனைப்பிட்டி" என்ற கிராமத்தையும், மூன்ருமாள் யாழ்ப்பாணம், பண்டத்தெருப்பு விசாரணைப்பங்கையும் சேர்ந்தவர்களாவர்.

இப்புதிய துறவிகள் ஆண்டவரின்திராட்சத்தோட்டத்தில் கடைசிவரைநிலைநின்று பிரமாணிக்கமாய் அவருக்குத் திருஊழியம்செய்து ஈற்றில்நித்தியசம்பாவனையைப் பெற்றுக்கொள்ள எல்லாம்வல்லஇறைவன் அருள்மாரி பொழிவாராக. இவ்வைபவத்தில் பங்குபற்றிய சகலருக்கும் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்ட பின் எல்லோரும் பெருமகிழ்ச்சியோடு தத்தம்இல்லமேக யாவும் இனிதுசமாப்தியாயிற்று.

நிருபர்.



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே!*

நிகழும் புரட்டாசிமாதம் 8-ந் திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை எங்கள் தேவதாயார் பிறந்த திருநாள்.. இத்தினம் எங்கள் எல்லோருக்கும் அகமகிழ்ச்சியைக் கொடுக்குந் தினம். ஏனெனில், தேவதாய் எங்கள் தாய். யேசு இரட்சகர் தமது மாதாவை எமக்குத் தாயாராகத் தந்திருக்கிறூர் என்பதை நினைக்குந்தோறும் அர்ச். பேர்க்மன்ஸ் அருளப்பர் மனமுருகிக் கண்ணீர்விட் டழுவார்.

பிதாவாகிய சருவேசுரன் எம்மை நேசிக்கிறபடியால் தமது ஏக குமாரனை எமக்குத் தந்தார். சுதனுன யேசு எம்மை நேசிக்கிறபடியால் தமது திருத்தாயாரை எமக்குத் தாயாராக அளித்திருக்கிறூர். இதை நினைக்குந்தோறும் நாம் மனமுருக வேண்டும் அல்லவோ! எம் தாயார் மட்டில் நாம் அன்பால் கொழுந்து விட்டெரிய வேண்டும் அல்லவா? அந்த நேசத்தைப் புதுப்பிக்க, அதிகமதிகஞ் சுவாலைவிட் டெரியச்செய்யத் தாயார் பிறந்த தினம் தகுதியன்றோ!

இத்தினத்தை நாம் ஞான ஆரவாரத்துடன் அனுசரிக்க வேண்டும். அதற்கு முந்திய தினத்தில் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யுங்கள். 8-ந் திகதியன்று காலையில் திவ்வியபூசை கண்டு திருவிருந் தருந்துங்கள். பின்பு தேவதாயாரின் திருச்சுரூபத்தைச் சந்தித்து, உங்களை அத்தாயாருக்குக் காணிக்கையாகக் கையளித்து, கிறீஸ்துநாதர் அவவுடைய திரு உதரத்தில் உருவானதுபோல, உங்களிலேயும் அவர் உருவாகும்படி வேண்டிக்கொள்ளுங்கள்.

எமது பரலோக அன்னையை நினைக்கும்பொழுது எங்களைப் பெற்ற தாயாரின் எண்ணம் மனதில் உதிப்பது இயல்பு. அர்ச். 10-ம் பத்திநாதர் மேற்றிராணித்துவ பட்டம் பெற்றபின் தமது தாயாரைச் சந்திக்கப் போனூர். மேற்றிராணியாருக்குரிய தமது மோதிரத்தைத் தாயாருக்குக் காட்டினூர். அப்பொழுது அந்த அம்மாள் தமது விரலிலிருந்த கலியாண மோதிரத்தைக் காட்டி: "மகனே! இந்த மோதிரத்தினுலேதான் நீ அந்த மோதிரத்தைப் பெற்ருய்" என்ருர். நாம் நல்ல நிலைபரத்திலிருந்தால் — நற்குண, நற்செய்கைகள் உள்ளவர்களா யிருந்தால் — உத்தம பதவிகளைப் பெற்றிருந்தால் அவையெல்லாவற்றிற்கும் எமது பெற்ரேர், சிறப்பாக எமது தாயார்தான் காரணமென்று நாம் அறிவோம். அறிந்து நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

ஆகையால், இத்தினத்தை எமது தாய்மாருக்கு நன்றியும், அன்பு நிறைந்த வணக்கமும் காட்டும் "தாயார் தின" மாக அனுசரியுங்கள். வீட்டிலுள்ள நீங்கள் எல்லோரும் பூசைவேளையில் அம்மாவுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

தேவஅன்னை உங்களையும், உங்கள் தாய்மாரையும் காப்பாவாக!

அண்ணை.

—(  )—

# பாதரட்சை வாங்கப் பணம் இல்லையே

முத். எற்மன்ட் சூசையப்பர் சிறுபிராய முதற்கொண்டே சம்மனசுக்குரிய பரிசுத்ததன முடையவராய் இருந்தார். மற்றப் பிள்ளைகளைப் போல் வீண்பகிடி பரிகாசங்களில் கலக்கமாட்டார். அவர் ஓர்பாலியனுய் இருக்கும்போது தேவதாயைத் தனதுமாதாவாகத் தெரிந்துகொண்டார். திவ்வியகுழந்தையைக் கரத்திலேந்திய மாதாசுரூபத்துக்கு முன்பாக நேசஉருக்கத்தோடும், பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் அடிக்கடி வேண்டிக்கொள்வார். அதனுல் பரிசுத்த தேவதாயும், குழந்தை யேசுவும் அவருடைய மாசற்றதனத்தின் நிமித்தம் அவரைத் தங்கள் செல்லப் பிள்ளையாக நடத்திச் சிற்சிலசமயங்களில் அவருடன் மிகுந்தஅன்போடு புதுமையாய்ப் பேசுவார்கள். உதாரணமாக, ஒருமுறைஎற்மன்ட் சூசையப்பருக்கு ஒருநல்லபழம் கிடைத்தது. அந்தப்பழத்தைத் தான்புசியாமல் குழந்தையேசுவுக்குக் கொடுக்க வேண்டும் என்றஆசை அவருக்கு வந்தது அப்படியே அந்தப்பழத்தைக் கொண்டுபோய்த் திருக்குழந்தைக்குக் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! குழந்தையேசு திருச்சுரூபம் தனது கரத்தைநீட்டி அந்தப்பழத்தை வாங்கிக்கொண்டது. வேறொருதடவை எற்மன்ட் குளிர்காலத்தில் பாதரட்சையின்றி நடுங்கிக்கொண்டு கோவிலுக்குப்போய்த் தமது வழக்கப்பிரகாரம் மாதாசுரூபத்தைப் பார்த்து வேண்டிக்கொண்டார். அப்போது மோட்சஇராக்கினி அவரைப்பார்த்து: "எற்மன்ட் ஏன் இந்தக் கடும்பனியில் பாதரட்சையில்லாமல் வந்தாய்?" என்று கேட்டார். அதற்கு அவர், "பாதரட்சைவாங்கப் பணம் இல்லையே" என்ருர். அப்போது தேவமாதா பக்கத்திலிருந்த ஒரு பெரிய பாறையைக் காண்பித்து அதிலே இன்ன இடத்தில் போய்ப் பார்; உனக்கு வேண்டிய பணம் கிடைக்கும்; அந்தப் பணத்தைக் கொண்டு பாதரட்சைகளை வாங்கிக் கொள்; உனக்குஎதற்கேனும்பணம் தேவையென்ருல் அங்கே போய்ப் பார்பணம்இருக்கும்"என்று மிகுந்த அன்போடு மொழிந்தார். அப்படியே அவருக்கு அவ்விடத்தில் அடிக்கடி பணம்கிடைத்து வந்தது. இதை அறிந்த மற்றப்பிள்ளைகளும் அவ்விடத்திற்குப்போய் ஆவலோடு பணம்தேடினூர்கள். ஆனுல், அவர்களுக்கு ஒருசதம்கூடக் கிடைக்கவில்லை.

சகோதரர்களே! நீங்களும் தேவமாதாவைக் கண்டுபாவித்துப் பரிசுத்தமாய்ச்சீவித்து, அவளுக்குப் பிரியப்பட நடந்துகொள்ளுங்கள். பரம கன்னிகையும் உங்களை மிகுந்தஉருக்கத்தோடுநேசித்து உங்களுக்குச் சகலவிதமான நன்மைகளையும் செய்து உங்களை இம்மையிலும், மறுமையிலும் தற்காத்து இரட்சிப்பாள்.

எஸ். பி. அருளப்பு,
சென். ஜேம்ஸ், இளவாலை.

## உன்னைப்போல்
# உன் அயலவனையும்...

— சா. பெ. —

புனிதஜசிந்தாபாடசாலையில் கணிதபாடம் நடந்துகொண்டிருந்தது. சில பயிற்சிகளைச்செய்யும்படி கொடுத்துவிட்டு மாணவிகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தார் சிஸ்றர் லூசியா. சிறுமி இமெல்டாமட்டும் கணிதத்தைக் கவனிக்கவில்லை. அவளின் சிந்தனை எங்கோசொன்றுவிட்டதை அறிந்தா சிஸ்றர். "இமெல்டா, நீ என்னசெய்கிருய்" என்ற அவரின் குரல் மாணவிகள் அனைவரையும் அவர்பால் நோக்கச்செய்தது.

"ஓ, சிஸ்றர், இன்று எனதுபிறந்த தினம். அதற்காக எனதுஅன்னை ஒரு அழகானகேக் தயார்செய்திருக்கிரு. அந்தக்கேக் எவ்வளவு அழகாயிருக்கிறது தெரியுமா? அதைப்பற்றித்தான் நினைத்தேன்" என்ருள் இமெல்டா மகிழ்ச்சியுடன். "எனக்கும் இன்றைக்குப் பிறந்ததினம் தான்"என்ற சோகக்குரல் ஒன்றும் சிஸ்றரின் காதில்விழுந்தது. உடனே திரும்பிப்பார்த்த அவவின்முன் காட்சியளித்தாள் சிறுமி மாகிறேற். "ஆனுல், சிஸ்றர், எனக்குக் கொண்டாட்டமும் கிடையாது. கேக்கும் கிடையாது" என்ருள். சிஸ்றர்லூசியாவின் மனக்கண் முன்பாக இரு பிள்ளைகளின் முகங்களும் காட்சியளித்தன. ஒருபிள்ளை பணக்காரி. மற்றவள் ஏழை. ஒருசிறுமி தனது பிறந்தநாட் கொண்டாட்டத்தை நினைத்துமகிழ்கின்ருள். அதேநேரத்தில் மற்றவளோ அவ்விதகொண்டாட்டத்தை எண்ணியெண்ணி ஏங்குகிருள். ஏழைப்பிள்ளையையும் மகிழச் செய்யவேண்டும். பணக்காரப் பிள்ளைக்கும் மற்றவர்கட்குதவுமாறு புத்திபுகட்ட வேண்டுமெனச் சிந்தித்தா சிஸ்றர் லூசியா.

ஞானுபதேசப்பாடத்துக்கு மணியடித்தது. "உன்னைப்போல் உன் அயலவனையும்நேசி"என்றயேசுநாதரின் திருவாக்கைஎடுத்து அழகாக விளக்கினுர் சிஸ்றர் லூசியா. மாணவிகள் அனைவரும் மிகவும்கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆசிரியையின் பொன்மொழிகளை அவர்கள் நன்கு விளங்கிக் கொண்டார்களா? ஆம் என்றுதான் விடையளிக்க வேண்டும். ஏனெனில், பாடம்முடியும்போது இமெல்டா மாகிறேற்றிடம்சென்று "இன்றுமாலை எங்கள் வீட்டில்நடக்கும் விருந்துக்கு நீயும் வரவேண்டும்"என்று மெதுவாகச் சொன்னுள்.

நான்குமணி அடித்தது. மாகிறேற்றின் கையைப்பிடித்தவண்ணம் வீட்டைநோக்கி ஓடினுள் இமெல்டா. வீட்டையடைந்ததும் மாடியறைக்குள்சென்று தனதுஅன்னையிடம் மாகிறேற்றைப்பற்றி எடுத்துரைத்தாள். திருமதி அன்னு சுந்தரம் தனது பிள்ளைகளைப்போலவே மற்றப்பிள்ளைகளையும் நேசிக்கும் சுபாவமுள்ளவள். தன்தந்தை பெரியபணக்காரரென்ருே, தன்கணவர் உயர்தர உத்தியோகஸ்தரென்ருே கர்வம் கொள்ளாதவள். இமெல்டாவையும், மாகிறேற்றையும் அழகாகச்சிங்காரித்து நந்தாவனத்திற்கு அழைத்துச் சென்ருள் திருமதி அன்னு.

நந்தாவனம் விழாக்கோலம் பூண்டு விளங்கியது. பலவர்ணவிளக்குகள் மின்னிக்கொண் டிருந்தன. வட்டவடிவமாகப் போடப்பட்டிருந்தஆசனங்களிலெல்லாம் பெரியபிரமுகர்களும், அவர்களின் குடும்பத்தவர்களும் அமர்ந்திருந்தனர். திரு. சுந்தரம் மிகமகிழ்ச்சியோடு எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார். நடுவே உயர்ந்த மேசையின்மீது பிறந்த தினக் கேக்ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கமாக உயர்ந்தஇருஆசனங்கள்வைக்கப்பட்டிருந்தன. இமெல்டாவின் சிநேகிதிகள் அனைவரும் மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர்,

இமெல்டா நந்தாவனத்துள் பிரவேசித்தபோது ஏராளமான வாழ்த்துகளுடன் நல்வரவேற்கப்பட்டாள். உயர்ந்தமேசையருகில் இருவரையும் அமர்த்தினுள் திருமதி அன்னு. இன்று இமெல்டாவுக்கு மாத்திரமல்ல, அவளின்தோழி மாகிறேற்றுக்கும் பிறந்த தினம்என்று திருமதி அன்னு அனைவருக்கும் கூறினுள். விழா மங்களகரமாக நடந்தது. கேக்கின்மேலுள்ள மெழுகுவர்த்திகளை இமெல்டாவுடன்சேர்ந்து அணைத்தபோதும், கேக்கை அவளுடன்சேர்ந்து வெட்டியபோதும் மாகிறேற் தன் தோழியின் தியாகத்தை எண்ணிப் பார்த்தாள். அவள்நெஞ்சம் நன்றியால் நனைந்திருந்தன.

விழாமுடிந்தது. விருந்தினர்கள் இமெல்டாவின் கரங்களில் தங்கள் அன்பளிப்புகளைக்கொடுத்து ஆசிகூறி வெளியேறினர். நன்றிசொல்ல நாவெழாது திகைத்துநின்ற மாகிறேற்றுக்குப் பலகாரம்நிரம்பிய ஒரு பார்சலைஅளித்தாள் திருமதி அன்னு. மாகிறேற், எனக்குவந்த இந்த அன்பளிப்புகளில் உனக்கு விருப்பியவற்றை எடுத்துக்கொள் என்றுகூறிய இமெல்டாவைநோக்கி, உனது அன்பொன்றே போதுமென்று மாகிறேற் எவ்வளவோ கூறியும், இமெல்டா விடுவதாகஇல்லை. ஈற்றில் இரு பொம்மைகளை எடுத்துக்கொண்டாள். சுந்தரம் தம்பதிகட்கும், தன் தோழிக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தபின் வீடு நோக்கிப் புறப்பட்டாள் மாகிறேற். அவள்மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது.

"அம்மா, பசி வயிற்றை அள்ளுகிறது; இன்றுமுழுவதும் ஒன்றும் கிடைக்கவில்லை" என்றகுரல் கேட்டுத் திரும்பினுள் மாகிறேற். ஒரு பிச்சைக்காரியையும், அவளின் குழந்தையையும் கண்டாள் ஒருகணம் யோசித்தாள். மறுகணம் அவளது

கையிலிருந்த பலகாரப்பார்சலில் பாதி பிச்சைக்காரியின் கையை அடைந்தது தன்னிடமிருந்தபொம்மைகளை ஆவலுடன்பார்த்த அவளின்குழந்தைக்கு ஒருபொம்மையையும் கொடுத்தாள் மாகிறேற். பிச்சைக்காரியின் வாழ்த்துகளையும்பெற்றுக்கொண்ட மாகிறேற் நேரமாகிவிட்டதைஉணர்ந்து வீடுநோக்கிஓடினுள். அவள்மனமோ அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தையும்சிந்தித்து மகிழ்ச்சி யடைந்துகொண்டேயிருந்தது.

சிஸ்றர் லூசியாவின் போதனை பணக்காரச்சிறுமியை ஏழைக்கும், ஏழைச்சிறுமியை மற்றொருஏழைக்கும் உதவிசெய்ய வைத்ததல்லவா? அந்தப்போதனையை நாமும் ஏற்றுக்கொள்வோம். எங்களைப்போலவே எங்கள் அயலவர்களையும் நேசிப்போம். அப்போது நாம்காணும் இன்பம் உண்மையிலேயே மகத்தான தொன்றுகும்

## புத்தக மதிப்புரை

### திருத்தொண்டர் சாவரு குரியாக்கோஸ் ஏலியாஸ் அடிகளார்

நூலாசிரியர்:
(மலையாள மொழியில்)
மறைத்திரு. ஆன்ஸெல்ம், T. O. C. D.
பதிப்பகம்:
அசிசி அச்சகம், நாகர்கோவில்.
விலை: சதம் 25.

கேரளநாட்டுக் கத்தோலிக்கர் வேதவிசுவாசத்தில்ஸ்திரமுடையவர். தருமசிந்தையும், தியாககுணமும் படைத்தவர். இத்தகைய கிறீஸ்தவ புண்ணியங்களெல்லாம் அந்நாட்டு மக்களின் பிறப்புச்சொத்தாகஅமையுமாறு தூய நல்வாழ்க்கைமுறையை அடியிட்ட பெருமை சீரியன்சபையைச் சாரும். கேரளத்தில் திருத்தொண்டாற்றிய சீரியன்சபையின் திலகம்போல விளங்கியவர் திருத்தொண்டர் குரியாக்கோஸ் ஏலியாஸ் அடிகளாவர். அத்திருத்தொண்டரின் வாழ்க்கைவரலாறு எம்மனோர்க்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக உதவுமென்ற நம்பிக்கையுடன் இச்சிறுநூலைத் தமிழில்மொழிபெயர்த்துள்ளார்கள்.

அடிகளாரின் தூய்மையான வாழ்க்கைபற்றியும், அவரின் சீரிய தொண்டுகள்பற்றியும் இந்நூல் எடுத்துக்காட்டுவதோடு இஷ்டப்பிரசாதநிலையில் சீவிக்கும் ஒருஆத்துமத்தின் உயர்ந்த மகிமையையும் விளக்கிநிற்கின்றது. உத்தமரான இவ்வடிகளாருக்கு அர்ச்சியசிட்டபட்டம் அளிப்பதற்கான ஆரம்ப நடபடிக்கைகள் எடுக்கப்படும் இத்தருணத்தில் அவரின் சீவிய வரலாற்றைப் படித்துத்தெளிதல் சாலவும் பொருத்தமானதே. மொழிபெயர்ப்பு நூல் என்று தோற்றுதவகையில் தமிழ்மரபு குன்றுதவாறு இனிய எளிய தெள்ளிய நடையில் தமிழாக்கம் செய்த மொழிபெயர்ப்பாசிரியர் தமிழ்நாட்டுக் கத்தோலிக்கமக்களின் பாராட்டுக்குரியவராவர். எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய நாதரின்இரக்கத்தினுலும், பரி. சதாசகாயமாதாவின் அருளினுலும், எங்கள்பங்கிலே யாத்திரை செய்துவரும் பாத்திமாஅன்னையின் பேருதவியினுலும், அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினுலும் மரணப்படுக்கையில் இருந்த எனதுதாயாரையும், வருத்தத்தினுல் பீடிக்கப்பட்ட எனதுமனைவியையும் அதிசயவிதமாய்க் குணமடைவித்ததற்காக என்முழுஇருதயத்தோடு அவர்களுக்குத் தோத்திரம்கூறி, நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

Jos. P. மனுவல்
மட்டக்களப்பு

## தேகவியோகம்

நீர்வேலியில் பரம்பரைச் சைவவேளாள குடும்பத்தவராயிருந்து பின்னர் நம்திருமறையிற் சேர்ந்து, உத்தமகத்தோலிக்கராய்ச் சீவித்து மரணமடைந்த ஸ்ரீமான் குமரேசர் வீரகத்திப்பிள்ளையின் இரண்டாவது புதல்வியும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வேதப்பரப்புதற்தொண்டில் அயராதுழைத்து 32 வருடங்களின்முன் அமரரான திரு. கபிரியேற்பிள்ளை உபதேசியாரின் அருமைப் பத்தினியுமான ஸ்ரீமதி பிரான்சிஸ்கா சின்னத்தங்கைச்சி அம்மையார் சென்ற ஆடித்திங்கள் முப்பதாம்நாள் அதிகாலை இறைவனடி சேர்ந்தாரென்பதைத் துயரத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நீர்வேலியில் உயர்சைவவேளாள மரபினர் பலரை நல்லூர்சுவாமியார் மனந்திருப்பினுராயினும், அவர்கள் கத்தோலிக்கமறையிற் கடைசிவரை திடசித்தத்துடன் ஒழுகிவந்துள்ளபெருமை காலஞ்சென்ற பிரான்சிஸ்கா அம்மையாரையே சார்ந்ததாகும். தமது நெருங்கிய உறவினர்கள் கத்தோலிக்கமறையைத் தளரவிட்டபோதும், முற்றிலும் சைவ மதத்தவரான இனசனர் அனைவரும் தம்குடும்பத்தை வெறுத்தொதுக்கியபோதும் குன்றுதவிசுவாசத்துடனும், இறைவனில் தளராத நம்பிக்கையுடனும் தனது குடும்பத்தினரைச் சத்தியவழியில் நடாத்திவந்தமை போற்றற்குரியதாகும். அதன் காரணமாக இவவின் புத்திரரத்தினங்கள் ஐவரும் பெருமைக்குரிய முறையில் நம் சத்திய மறைக்காகச் சேவையாற்றி வருகின்றனர்.

திருமதி றெஜினு இரத்தினம், நீர்வேலிக் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை திருமதி சொர்ணம்அன்னம்மா, திருநெல்வேலிக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியை திருமதி திரேசம்மா நல்லம்மா, நாவாந்துறைக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசம், இலங்கைவங்கிச் சுருக்கெழுத்தாளரான திரு. ஜெகராஜா என்போர் இவவின் பிள்ளைகளாவர். வைத்திலிங்கம் கம்பெனியின் கணக்காளரான திரு. வி. எம். தேவசகாயம், குருநகர் சென்யேம்ஸ் பாடசாலை ஆசிரியர் திரு. எம். எஸ். அந்தோனிப்பிள்ளை, ஏ. எஸ். சங்கரப்பிள்ளை ஸ்தாபன லிகிதர் திரு. ஏ. பி. சவிரிமுத்து, நாவாந்துறைக் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை திருமதி மரியைப்பிள்ளை, வத்தளைக் கன்னிகாமட ஆசிரியை திருமதி மரியதெரேசா ஆகியோர் இவவால் அன்பாக நேசிக்கப்பட்ட மருமக்களாவர்.

கடந்தசில வருடங்களாக வியாதியால் வருந்திய இவ்வம்மையார் தமது அறுபத்தெட்டாவது பிராயத்தில் அந்திம தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப் பெற்று மனஅமைதியுடன் படைத்தோன் கரங்களில் தமதாவியை ஒப்படைக்கலாயினர். இவவின் பிரேதமானது அடுத்த நாட் சாயந்தரம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலபாகங்களிலு மிருந்துவந்த திரளான ஆசிரியர்கள், அன்பர்கள் புடைசூழ வண. செல்வராசா சுவாமியவர்கள் துக்கசங்கீதமிசைக்கப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் சேமக்காலை கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று. இவவை இழந்து துன்புறும் மக்கள், மருமக்கள், பேரர்கட்கு எம் அனுதாபங்கள் உரித்தாகுக.

● உலாந்தநாட்டு ஜூலியா இராணியாரின் மகாவிசேஷப்பட்ட ஆலோசனைச்சங்கத்தின் உபதலைவராக முன்னைநாள் உலாந்த பிரதமரான டக்றர் லூயிஸ் பீல்அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றுர். உலாந்தநாட்டின் சரித்திரத்திலே இந்தப்பதவிக்குக் கத்தோலிக்கர்ஒருவர் நியமனஞ்செய்யப்பெற்றது இதுவேமுதன்முறையாகும்.

● பூமண்டலத்திலுள்ள மனிதகோடிகள் அத்தனையையும் ஏககாலத்தில் அழித்துவிடக்கூடிய நஞ்சுப்பொருள்ஒன்றைத் தாம்கண்டுபிடித்திருப்பதாக 'ரூடார்' அபிவிருத்தியில் ஆக்கத்தொண்டாற்றியுள்ள பிரபலபிரித்தானிய விஞ்ஞானியான சேர் றெபேட் வாட்சன் தெரிவித்திருக்கின்றுர். பொதுமக்கள் அறியாதபடி உத்தியோகவட்டாரங்கள் இரகசியமாக இதைவைத்திருக்கின்றனவாம்.

## மரண அறிக்கை

ஆனைக்கோட்டைவாசரும், பொலிஸ்பகுதியில் கடமையாற்றி இளைப்பாறியிருந்தவருமான திரு.டேவிற் மிக்கேற்பிள்ளை அவர்கள் கடந்த சிலமாதகாலமாக விருத்தாப்பியநோய்கண்டு அந்திய தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்றுச் சென்ற 19-8-59 புதன்வாரம் அதிகாலை 3மணியளவில் தன்ஆன்மாவைப் படைத்தோனிடம் அடக்கமாக ஒப்புக்கொடுத்து, தமது 73-ம்வயதில் மரணத்திரையில் மறையலாயினர்.

இவருக்கு ஒருபுதல்வனும், மூன்றுபுதல்விகளும் உளர். இவரின் பிரேதமானது மறுநாள் காலை 10மணியளவில் உறவினர், சிநேகிதர், மற்றும்பலர் பெருந்தொகையாகப்புடைசூழ வண. ஏ. சார்வே,வண. ஜே. பிரான்சிஸ்,வண.ஏ.சுவாம்பிள்ளை ஆகியகுரவர்கள் துக்க சங்கீதம் பாடிச்செல்ல, வெண்பரிபூட்டிய இரதத்தில் ஆனைக்கோட்டை, அர்ச் அடைக்கலநாயகி ஆலயத்தைஅடைந்து ஆசீர்வாதம் அருளப்பெற்று, பின்னர் சேமக்காலை கொண்டுசென்று இறுதிஆசீர்வாதம் அருளியதும், நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், மற்றும் கிறீஸ்துவர்கள் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடிக்கொள்ளுமாறு பணிவாய்வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1561

பண்ணுகம் தெற்கு
1. ராமநாதர் சின்னக்குட்டி
கைம்பெண் சின்னச்சிப்பிள்ளையும்,
சங்கானை மேற்கு
2. சின்னக்குட்டி ஆறுமுகசாமியும்
— வழக்காளிகள்.
எதிராக
சரவணமுத்து நாகலிங்கம், சுளிபுரம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1561-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1959-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 19-ந் திகதி சனிக்கிழமைமுற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,825-உம், இதற்குத்தீர்வை 2,000-த்திற்கு 29-3-57 திகதிதொடக்கம் 14-11-57திகதிவரைக்கும் 100-க்கு 8வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 234ரூபா 52சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்மேற்கு சங்கானைகோயிற்பற்று, சுளிபுரம்இறை "கஞ்சம்பத்தை" மறுபிரிவும், பர. நில. இலா. ஆறும் (6), குளி ஒன்றும் (1), வீடும், வான்பயிர், செய்பயிர்களும், கிழக்குஎல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை: கிழக்கு— நல்லதம்பி சுப்பிரமணியத்தின் உரித்தாளருக்கு உரியஆதனம். வடக்கு —ஒழுங்கை. மேற்கு— விசுவநாதர் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம். தெற்கு—கந்தையா கனகசபைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம்.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிஷனர்.

விதானைவளவு,
சித்தன்கேணி,
9.8-59.

## நேர்த்தியின் பூர்த்தி

எனது மகனுக்கு ஒரு உத்தியோகம் கிடைக்கும்படியாக அர்ச். அந்தோனியாருக்கு நவநாள்செய்து மன்றுட்டுக்கிடைக்கப்பெற்றேன். நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன். அவர்நாமம் புகழப்படுவதாக.

மிசெஸ் ஏ. அன். வில்லவராயன்
நீர்கொழும்பு

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**கொடியேற்று விழா:** மாபெரும்சோலைசூழ் ஆயித்தியமலைத் திருப்பதியில் கோயில்கொண்ட நமது பரிசுத்தஅன்னையாம் சதாசகாயமாதாவின் வருடாந்தஉற்சவ ஆரம்பமாக, கடந்த 24-8 59 திங்கட்கிழமை மாலை 6மணியளவில் இத்திருப்பதிப் பரிபாலனர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் சம்பிரதாயப்படி தேவாலயமணிகள் ஆர்ப்பரிக்க, வாத்தியங்கள் முழங்கத் தேவதாயின் திருச்சாயல் பொறிக்கப்பட்டதுகில் கொடித்தம்பத்தின்உச்சியை அடைந்தது. இடம்வலமாகப் பாப்பரசரினதும், திருஇருதய நாதரினதும் நிறக்கொடிகள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து செபமாலை, பிரார்த்தனை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் நடைபெற்றன. இறுதியில் அனைவருக்கும் நேர்த்திக்கஞ்சி வழங்கப்பட்டது.

இவ்வருடஉற்சவத்திலே மாலைவேளை திவ்வியபூசை, திருமணிஆராதனை, திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரமஎன்பன இடம்பெறுகின்றன. திருநாள் வைபவங்கள் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி, எஸ்.ஜே. ஆண்டவர்அவர்களால் நடாத்தப்படும். திருநாள்முடிவு தினம் 6-9-59.

"தாயே! உன்பாதம் தஞ்சமென்
றேடிவந்தோம்
நீயல்லால் ஓர்துணை யாருமில்லாதது
நிச்சயம் நிச்சயமே!"
— நிருபர்

## ஜப்பானிய பொருட்காட்சிக்கப்பல்

ஜப்பானிலே உற்பத்திசெய்யப்படும் பொருட்களைக்கொண்ட காட்சிக்கப்பல் ஒன்று விரைவிலே உலகின்பலநாடுகளுக்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்யவிருக்கின்றது. இதற்கெனத் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள பெரியதோர் ஆடம்பரக்கப்பலின் மத்தியிலுள்ள இருதட்டுகளிலும் சுமார் 400 கடைகள் இருக்கும். இவற்றிலே ஜப்பானில் உற்பத்திசெய்யப்படும் சகல பொருட்களினதும்மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். ஜப்பானிய பிரசாரவல்லுனர்கள், விற்பனைத்துறை வல்லுனர்கள் ஆதியோரின்உதவியுடன் இந்தக் காட்சிக்கப்பலின் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறச் சகலநடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன. வடதுருவத்தையும், அத்திலாந்திக் சமுத்திரத்தையும் அடுத்தபகுதிகள் நீங்கலாக உலகின் சகலபகுதிகளுக்கும் இக்கப்பல் விஜயஞ்செய்யவிருக்கிறது. இந்தக் காட்சிக்கப்பல் 30லட்சம்பவுண் செலவிலே கட்டப்பட்டுள்ளது.

* * *

● பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரும், பிரான்ஸிய ஆயுதபலங்களின் பிரதம விசாரணைக்குரவருமான கருதினுல் பெல்தின் ஆண்டவர் சமீபத்திலே தமதுகுருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடியபோது தேசமக்களின் பாராட்டுதலாகப் பிரான்ஸிய அரசாங்கம் அவரை "லீஜன் அவ் ஒனர்" என்னும் மகிமைவரிசையின் கம்மாண்டராக ஆக்கியுள்ளது.

● கேரளத்திலே கம்யூனிஸ்தஅரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு இராச்சியத்தின் நலன்களைப் பலியிட்டதாக அதன்உள்நாட்டுக் காரியதரிசி, பொலிஸ் இன்ஸ்பெக்றர்-ஜெனறல், மற்றும்பல உயர்தரஅதிகாரிகள்மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி அவர்களைப் பதவிகளிலிருந்து நீக்கவேண்டுமென்ற கிளர்ச்சி பொதுமக்களிடையில் எழத்தொடங்கியிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 3-1959.